விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 09 வெள்ளிக்கிழமை (24.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 005

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அடுத்துவரும் இரண்டு வருடங்களில் ஆட்டம் காணும் அரசாங்கம்

## அமைச்சர் ஒருவர் ஆரூடம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இன்னும் இரண்டொரு வருடங்களுக்குள் கவிழ்ந்துவிடும் என அமைச்சரொருவர் எதிர்வு கூறியுள்ளார். தனக்கு நெருக்கமான ஊடகவியலாளர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த விருந்து உபசாரமொன்றில் வைத்தே அவர் மேற்கண்டவாறான கருத்தை வெளியிட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பாதுகாப்புத் தினம் ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில்

### பிரதம அத்தியாக பிரதமர்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தை நினைவு கூரும் முகமாக அனுஷ்டிக்கப்படும் தேசிய பாதுகாப்புத் தின நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. பிரதமர் டி.எம்.ஜயரட்ன பிரதம அதிதியாக கலந்து கொள்வார் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

உத்தியோகபூர்வ தேசிய பாதுகாப்புத் தின

(16ஆம் பக்கம் பார்க்க)



## வெளிவிவகார அமைச்சர் கூறியது தவறு; நேபாளத்திடம் மன்னிப்புக் கோரிய அரசு

(கொழும்பு)

நேபாளத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாட்டாளராக செயற்படுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அந்நாட்டு ஜனாதிபதி ராம் பரன் ஜாதவ் வேண்டுகோள் விடுத்திருந்ததாக வெளியான செய்திகள் குறித்து இலங்கை அரசாங்கம் மன்னிப்பு கோரியுள்ளது.

நேபாளத்தில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு நேபாள ஜனாதிபதி ராம் பரன் ஜாதவ் சீனாவில் வைத்து வேண்டுகோள் விடுத்திருந்ததாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின்

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடைக்கால செயற்குழு

(கொழும்பு)

ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இடைக்கால செயற்குழுவொன்றை நியமிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் புதிய யாப்பின் கீழ் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படும்வரை இடைக்கால செயற்குழுவினர் உத்தியோகபூர்வ கடமைகளையாற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக்கொள்ள தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஆலோசனை

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் இணைத்துக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்பட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஹசன் அலி விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகளின் அரங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட பெண் உறுப்பினரான சிவகாமி எனப்படும் தமிழினியை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமி

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகளின் திருத்தப் பணிகளில் திருப்தியில்லை



### அமைச்சர் டக்ளஸ் காட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வீதிகள் செப்பனிடப்பட்டு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றில் பல வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. இந்தத் திருத்தப் பணிகள் திருப்தியடையக் கூடிய வகையில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கைகளை பாராட்டுகிறது அமெரிக்கா

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதில் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அமெரிக்க நேற்றுப் பாராட்டியுள்ளது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன் என அமெரிக்கத் தூதுவர் பற்றீஷியா புட்னீஸ் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவமும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களும் கண்ணிவெடிகளை அகற்றும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அனர்த்த நிதியம் உருவாக்கம்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமிடத்து விரைந்து துலங்கவும் அவற்றின் தாக்கங்களை குறைத்துக்கொள்ளவும் என தேசிய அனர்த்த நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அனர்த்தமுகாமைத்துவ நிலையம் நேற்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர்கள் குழுவினரின் வாக்குமூலங்களை பதியத் தயார்

### நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவின் வாக்குமூலங்களை சாதாரண நடைமுறைகளுக்கு அமைய பதிவு செய்து கொள்வதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின்

(16ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES

Jaffna யாழ்ப்பாணம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

After O/L

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன! முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கைப் சேவை தடைப்பட்டது

இணையத்தளம் ஊடாக தொலைபேசி வசதிகளை வழங்கிவரும் ஸ்கைப் சேவை உலகம் முழுவதும் தடைப்பட்டுள்ளது. இதனால் பல மில்லியன்பேர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த ஸ்கைப் சேவை இதற்குமுன்னர் 2007 ஆம் ஆண்டு செயலிழந்தது.

எவ்வாறாயினும் தமது சேவை தடைப்பட்டுள்ளமை குறித்து ஸ்கைப் சேவையின் பிரதான நிறைவேற்று அதிகாரி டெனி போட்டிஸ் பாவனையாளர்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார். தடைக்குக் காரணமான தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்து உடனடியாச் சேவையை வழங்குவதாகவும் அறிவித்துள்ளார். (ச-5)


செல்லா/சினிமா [நாதனீஸ்]
03.12.2010 முதல்
ஆர்யா, ஸ்ரேயா, சந்தானம் நடித்த




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30


# இறப்பர் செய்கையை மேற்கொள்ள வடக்கில் சாதகமான காலநிலை

வட மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை அடுத்த ஆண்டு மேற் கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இப் பரீட்சார்த்த இறப்பர் பயிற்செய்கை வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சுமார் 7ஏக்கர் நிலப்பரப்பில் 6கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பயிர்ச்செய்கை குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் இயக்குநர் பிரேமதாஸ பெருந்தோட்டத்துறை அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இப் பரீட்சார்த்த இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான காலநிலை மற்றும் சுவாத்தியங்கள் சாதகமாக இருப்பதாக இப் பயிர்ச்செய்கை தொடர்பில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-5)

## ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரிந்தவர் விபரம் பெறல்

1990ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட ஆனையிறவு உப்பள உற்பத்திப்பணிகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளமையால் 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆனையிறவு உப்பளத்தில் நிரந்தர, தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்த அறுபது வயதுக்கு உட்பட்ட ஊழியர்கள் 27.12.2010 அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் கட்டடத்தின் 4ஆம் மாடியில் உள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்தில் தங்கள் விபரங்களை வழங்குமாறு யாழ் மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கேட்டுள்ளார். (ந)


## ஜேர்மனிய மொழி வகுப்புக்கள் ஆரம்பம்

Eu Lanka Forum நிறுவனத்தினரின்

ஏற்பாட்டில் எதிர்வரும் தைமாதம் 5ஆம் திகதி முதல் விசேட ஜேர்மனிய ஆசிரியருடாக ஜேர்மனிய மொழி கற்பிக்கப்படவுள்ளது. இம் மொழியை கற்க விரும்புவோர் 3, 4ஆம் திகதிகளில் எமது அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல:29, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0217200157 (சி-1885)

நிர்வாகத்தினர்,
Eu Lanka Forum.



## வீடு வாடகைக்கு தேவை

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் கௌரவமான ஆசிரியர் குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. ஐந்து பரப்புக்கு குறையாத நிலமும் தனியான குடிநீர் வசதியும் வீட்டுடன் இருத்தல் அவசியம்.

தொடர்பு: 0771999641 (C-1888)


# பஸ் விபத்தில் சிறுமி படுகாயம்

## நெல்லியடியில் சம்பவம்

(கரவெட்டி)

நெல்லியடி சந்தைக்கு முன்பாக வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துடன் ஏற்பட்ட விபத்தில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய் தெற்கு மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த ரவீந்திரன் நிவேதா (வயது 15) என்பவரே விபத்துக்குள்ளானவர் ஆவர்.

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்த வேளையில் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்த பேருந்து மோதியதில் தலையிலும், கையிலும் பலத்த காயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துத் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-7,24)


## அரசாங்க அறிவித்தல்

## பகிரங்க ஏல விற்பனை

*மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பயன்படுத்தப்பட்ட, பழுதடைந்த அலுவலக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பழுதடைந்த பொருட்கள் 30.12.2010 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.*

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர் /மாவட்ட செயலர்
யாழ்.மாவட்டம். (சி-1899)



## ST.JOHN'S COLLEGE, JAFFNA.

## ADMISSION - 2011 FOR SRI LANKAN / LONDON ADVANCED LEVEL (TAMIL / ENGLISH - MEDIUM)

தரம் 12 இற்கு (A/L 2013 Batch) தமிழ் / ஆங்கில மொழி மூலமும் லண்டன் (A/L) கற்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சென்.ஜோண்ஸ் கல்லூரியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு:

1. விஞ்ஞான, கணித, வர்த்தகத் துறைகளுக்கு ஆங்கில மொழி மூலக் கற்கை நெறியும் உண்டு.
2. லண்டன் A/L கற்கைக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.
3. தரம் 12 (A/L 2013 Batch) விண்ணப்பதாரி 01.02.1994 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
4. அனுமதிப் பரீட்சை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் — 05.01.2011 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.
5. புதிய வகுப்புக்கள் 10.01.2011 இல் ஆரம்பமாகும்.
6. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும், உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

*விண்ணப்பப் படிவங்கள் கல்லூரியில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.*

-அதிபர்

(கு-1889)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கற்கோவளம்
மண்ணின் மைந்தன்
*ஹாட்லிக் கல்லூரி*
*மாணவன்*
அருந்தவராசா
கரிகாலன்
*கணிதப்பிரிவில் 3A.*
*மாவட்டநிலை 10.*
*தேசிய நிலை 96*
*பெற்றமையை*
*உளமாரப் பாராட்டி*
*வல்லிபுரம் மாயவனின்*
*அருள் பெற்று அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துவோர்:
உதயதாரகை விளையாட்டுக்கழகம்,
கற்கோவளம்.

(சி-1890)



## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில்

## சிவசுப்பிரமணியக்குருக்கள் அறக்கொடை நிதியம் வழங்கும்

# இசை நாட்டியாஞ்சலிப் பெருவிழா

*கனடா வாழ் நவரச நாயகி*
செல்வி ஜெயதருணி ஜெயபாலேந்திரன் *மற்றும்*
செல்வி ஷஷ்டிகா கமல்ராஜ் குருக்கள்
*ஆகியோரின் நாட்டியாஞ்சலியும்*
*கனடா வாழ்* செல்வி தாட்ஷாயினி மணிவாசகன் *அவர்களின்*
இசை அஞ்சலியும்.

காலம்:- 24.12.2010 இன்று (வெள்ளிக்கிழமை) பி.ப. 05.30
இடம்:- வண்ணை வீர மாகாளி அம்மன்
அன்னபூரணி அலங்கார மண்டபம்

தலைவர்: செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன்
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
தலைவர், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம்)

பிரதம விருந்தினர்: திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
(யாழ்/மாநகர சபை முதல்வர்)

சிறப்பு விருந்தினர்: திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம்
(அதிபர், யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி)

ஆசியுரை: சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக் குருக்கள், J.P.
(அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளரும், அதிபரும்)
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(இரண்டாவது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்)

*அன்றையதினம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற இரண்டு குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் வழங்கப்படவுள்ளது.*

இங்ஙனம்: சிவ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
(வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் பிரதம குருவும்,
சிவசுப்பிரமணியக்குருக்கள் அறக்கொடை நிதிய ஸ்தாபகரும்)

*விளம்பர அனுசரணை*
*ஆனந்த தர்சனம் ஆற்றுகை கலைகள் சர்வதேச நிறுவகம்*



## மாபெரும் மலிவு விற்பனை

மது பான்சி கவுஸ், பிள்ளையார் களஞ்சியம் இணைந்து நடாத்தும் புதுவருடம், தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை. பிளாஸ்ரிக் கதிரைகள், வாளி, பாய், தும்புத்தடி மற்றும் பிளாஸ்ரிக் சம்பந்தமான பொருட்கள், எவர் சில்வர் பாத்திரங்கள், மாபிள், பீங்கான்கப், கிளாஸ், அலுமினியப் பாத்திரங்கள், கிடாரம், தாச்சி, பாடசாலைக்குத் தேவையான பாக், கொப்பிகள், பொங்கல் பானைகள் மற்றும் பேபி கிப்ட் செலக்ஷன், றவுலிங்பாக் அனைத்தும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
யாழ்வீதி, மானிப்பாய்.

(சி-1898)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தொண்டு

ஒரு ஊரில் ஒரு பாதிரியார் மிகவும் சந்தோஷமாக வாழ் ந்து வந்தார்.

ஒருநாள் அவர் மடத்து சமையலறையில் பாத்திரங்களை கழுவி துலக்கி சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் ஒரு தேவதூதன் அவருக்கு முன்னால் வந்து நின்றான். இவர் நிமிர்ந்து பார்த்தார்.

" ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார். பரலோகத்தில் வாசம் செய்வதற்கு உங்களுக்குரிய நேரம் வந்து விட்டது"என்றான் அவன்.

"ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும் இப்பொழுது இங்கே நீயே பார். எவ்வளவு பாத்திரங்கள் இருக்கிறது. இவ்வளவையும் நான் சுத்தப்படுத்த வேண்டியிருக்கிறது. நான் நன்றி கெட்டவனாக இருக்க விரும்பவில்லை. இந்தப் பணியை முடிக்கும் வரைக்கும் என் பரலோக வாழ்வை தள்ளி வைக்க முடியுமா? நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார்.

தேவதூதன் தனக்கேயுரிய விவேகத்துடன் அன்போடு பாதிரியாரைப் பார்த்தான்.

"சரி,என்ன செய்யலாம் என்பதை பின்னர் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டான்.

ஒருநாள் அந்தப் பாதிரியார். தோட்டத்திலுள்ள களை களையொல்லாம் கொத்தி களையெடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் இந்த தேவதூதன் மறுபடியும் அவருக்கு முன்னால் வந்து நின்றான். பாதிரியார் பார்த்தார்.

"இதோபார். இந்தத் தோட்டம் முழுவதும் எவ்வளவு களைகள் மண்டிக் கிடக்கிறது? பரலோகம் கொஞ்சக் காலம் எனக்காகப் பொறுத்திருக்கலாமென்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டார். தேவதூதன் சிரித்துக் கொண்டே மறுபடியும் மறைந்து விட்டான். மறுபடியும் அவர் களையெடுப்பது, தானியக் களஞ்சியத்துக்கு வர்ணம் பூசுவது போன்ற வேலைகளில் ஈடுபட்டார். இன்னொரு நாள் ஒரு மருத்துவமனையில் நோயாளிகளைக் கவனிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார் அந்தப் பாதிரியார். ஒரு நோயாளியின் தாகத்துக்கு தண்ணீர் கொடுத்து விட்டு நிமிர்ந்து பார்க்கும் போது தேவதூதன் மறுபடியும் அவருக்கு முன் தோன்றினான்.

இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக பேரன்பைக் காட்டக் கூடிய வகையில் தன்னுடைய இரு கைகளையும் உயர்த்தியபடி தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடக்கூடிய நோயாளிகளின் பக்கம் திருப்பினார்.

தேவதூதன் ஒன்றும் ·சொல்லாமல் மறைந்து விட்டான். அன்றுமாலை பாதிரியார் மடத்திலுள்ள தன்னுடைய அறைக்குப் போய் இளைப்பாறினார். யோசித்துப் பார்த்தார். தேவதூதனையும் தேவதூதனின் விருப்பத்தையும் பலநாள் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தார். திடீரென்று தான் முதுமையடைவதையும் சோர்வடைவதையும் உணர்ந்தார்.

ஆண்டவரை நினைத்தார்.

"ஆண்டவரே! உம்முடைய தூதனை மறுபடியும் என்னிடம் அனுப்பினால் நான் சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்" என்று சொல்லும் போதே தேவதூதன் அருகில் வந்து நின்றான்.

பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார்.

"நீ இப்பொழுதே என்னை அழைத்துக் கொண்டு போக விரும்பினால் பரலோகத்திற்கு வரத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

தேவதூதன் அந்தப்பாதிரியாரை அன்புடனும் விவேகத்துடனும் பார்த்து,

"நீங்கள் இதுவரைக்கும் வேறு எங்கே இருந்ததாக நினைக்கிறீர்கள்?"என்றான். பரலோகம் என்றால் என்வென்று புரிந்து கொள்வதற்காக இந்தச் சம்பவம் நமக்கு உதவியாக இருக்கிறது.

தொண்டு செய்வதைவிட பெரிய செயல் வேறெதுவும் இருக்க முடியாது. அது நம் மனதுக்குள் கொடுத்த சுகத்தை வேறெதுவும் கொடுக்க முடியாது.

ஆனால் இந்தக் காலத்திலெல்லாம் நாம் தொண்டு செய்ய வேண்டுமென்று நினைத்து ஏதாவது ஆரம்பித்தால் கூட அதை ஒரு மாதிரியாக சுற்றி நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

ஒரு பெரியவர் தொண்டு செய்து கொண்டிருந்தார். ஒரு கோவில் கட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது.

அதில் ஓரிடத்தில் ஒரு பலகையை வைத்து ஆணி அடித்துக் கொண்டிருந்தார் அந்தப் பெரியவர். ஒரு சின்னப் பையன் அதை ரொம்ப அக்கறையாக கவனித்துக் கொண்டிருந்தான். பெரியவர் இதனைக் கவனித்தார்.

"என்னப்பா பார்க்கிறாய்? உனக்கும் இதுபோன்று தொண்டு செய்ய வேண்டுமென்று ஆசையுண்டா?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன்,

"அப்படி இல்லை. நீங்கள் ஆணியடிக்கும் போது கையில் சுத்தியல் அடிபட்டு விட்டால் என்ன செய்வீர்கள் என்று தெரிந்து கொள்வதற்காகத் தான் நிற்கிறேன்"என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## வடக்கு- கிழக்கு மாகாணங்களில்

# 136 வங்கிக்கிளைகளை திறப்பதற்கு இலங்கை மத்தியவங்கி தீர்மானம்

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் புதிதாக 136 வங்கிக் கிளைகளைத் திறப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

தற்போது இந்த இரு மாகாணங்களிலும் 59 வங்கிக் கிளைகள் இயங்கி வருகின்றன. இதனை விட கிழக்கு மாகாணத்தில் 64 கிளைகளையும் வடக்கில் 72 வங்கிக் கிளைகளையும் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த இரு மாகாணங்களிலும் வெளிநாட்டு வங்கிகளும் தமது கிளைகளைத் திறப்பதற்காக மத்திய வங்கியிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன.

இருப்பினும் புதிய வங்கிக் கிளைகளைத் திறப்பதற்காக பெரும்பாலும் உள்ளூர் வங்கிகளில் இருந்தே அதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், வெளிநாட்டு வங்கிக்கிளையொன்று ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் திறந்து வைக் கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பாகிஸ்தான் வங்கியொன்று கிழக்கு மாகாணத்திலும் இந்திய வங்கியொன்று யாழ்ப்பாணத்திலும் ஒவ்வொரு கிளையை நிறுவி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மீன்பிடி, கைத்தொழில் போன்ற சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் தகவல் தொழில் நுட்பம், விடுதி மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் குறித்த இரண்டு மாகாணங்களி லும் வங்கி வர்த்தக நடவடிக்கைக ளுக்கு பாரிய வாய்ப்புக்கள் காண ப்படுவதாக சுட்டிக்கா ப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4-9)

# க.பொ.த.உயர்தர பெறுபேறுகள்

**மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்**

வணிகப் பிரிவு

ஜெ.சிந்துஜா 2ஏசி, சி.தனுஜன் 2ஏசி, ப.நிகிந்தன் ஏபிசி,க.கசீபன்2பிசி

கலைப்பிரிவு

த.நித்தியரூபன் 2ஏபி, க.மனோசா 3ஏ, ஈ.தமிழினி 2ஏபி, சு.சுபநீதன் ஏ2பி, த.சுரேகா ஏபிசி, சி.நிரோஜன் ஏ2பி, மோ. அருள்ராஜ் ஏ2சி, நி.கீர்த்தனா ஏ2சி. (ஸ்ரீ-3-29)




*ஜப்பான் சர்வதேச கூட்டுத்தாபன நிறுவனத்தினால் (JICA) யாழ்.மாவட்டத்தில் புதுப்பிக்கப்பட்ட குளங்களை விவசாயத் திணைக்களத்திற்கு கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நல்லூரில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ். கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், இக்குளங்களைப் பராமரிக்கும் பொறுப்பை 7 விவசாய அமைப்புக்கள் கொண்ட குழுவிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.*

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 180 | 180 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 |
| தக்காளி | 70 | 90 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 70 | 100 | 60 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 100 | 100 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 180 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 |
| பாகற்காய் | 180 | 200 | 170 |
| வெண்டிக்காய் | 60 | 90 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 | 50 |
| பயற்றங்காய் | 200 | 200 | 170 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 140 | 90 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 |
| முருங்கைக்காய் | 250 | -- | 250 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 |

# இராசி பலன்

*24.12.2010*
*(மார்கழி 9, வெள்ளிக்கிழமை)*
*திருதியை முற்பகல் 10.25 மணிவரை*
*பூசம் பிற்பகல் 2.49 மணி வரை*
*இராகுகாலம் 10.56-12.26 மணிவரை*
*சுபநேரம் 6.26-7.56 மணி வரை*
*சங்கடகர சதுர்த்தி விரதம்.*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமையடையும் நாள், வழிபாடுகளில் கூடிய கவனம் செலுத்துவீர்கள், பொருட்கள் வாங்கி மகிழும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கப்படலாம்.

**இடபம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கலாம், உறவினர் வழி ஒத்துழைப்புண்டு, தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள், நினைத்த காரியத்தை முடித்து மகிழும் நாள்.

**மிதுனம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய் ¥ D " õ , எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமிடும் நாள், தெய்வதரிசனமுண்டு, சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்** பிரபலமானவர்களின் சந்திப்பு அமையலாம், சந்தேகமான காரியமொன்று நல்ல படியாக அமையலாம், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிறர்க்கு உதவி செய்வதால் சில வேளை மனக்குறையும் ஏற்படலாம்.

**கன்னி** வழிபாட்டால் சந்தோசமடையும் நாள், விருந்தினரை வரவேற்று வியப்படையும் சூழ்நிலை உருவாகும், தூரதேசப்பயண வாய்ப்புக்கள் கைகூடும்.

**துலாம்** வரவேண்டிய தொகைகள் þ ç , உற்சாகமாகப் பணிபுரியும் நாள், தேடிச் சென்றவர்கள் உங்களை நாடி வரலாம்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்கள் இயல்பாக நடைபெறும், பிரயாண அனுகூலமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** பிரயாணத்தில் கவனம் தேவை, தொழிலில் கூட்டாளிகளிடம் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது, திடீர் செலவுகளை சமாளிக்க வேண்டி வரலாம்.

**மகரம்** நினைத்த காரியம் நிறைவேறும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், பகைவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்கள் தொடர்பில் ஆதாயம் ஏற்படலாம், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்ட இளைஞர் விருது வழங்கும் விழா நேற்று திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் அலுவலகர் வினோதினி ஸ்ரீமேனன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இளைஞர் விருதினை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-எஸ்.கரன்)

# வீதியின் நடுவில் பாரிய குழிகள்; அடிக்கடி விபத்துச் சம்பவங்கள்

(கொழும்புத்துறை)

கல்வியங்காடு செங்குந்தா சந்தை முன்பாக உள்ள பருத்தித்துறை வீதியின் நடுவில் இரண்டு பாரிய குழிகள் காணப்படுகின்றது.

இதனால் இவ் வீதி ஊடாக போக்குவரத்தை மேற்கொள்வோர் பெரும் இடையூறுகளை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் மழை காலங்களில் இக் குழிகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதனால் குழியை இனங்காண முடியாதுள்ளது. இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்து மக்கள்போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# வடமராட்சியிலுள்ள மூன்று பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு அனுமதி

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை,நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம் ஆகியவற்றில் கற்பதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேட தேவையுள்ள மாணவர்கள் இப் பாடசாலைகளில் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

இவர்களுக்குக் கற்பிப்பதற்கென இப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் விசேட கல்வித் தேவைகளுக்காக 2 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா கல்வியமைச்சினால் வழங்கப்பட்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் விசேட கல்வித் தேவையுள்ள மாணவர்களுக்கு இவ் வருடம் மூக்குக் கண்ணாடி மற்றும் மருத்துவத் தேவைகளுக்காக ஒரு இலட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் மற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், கல்விச் சுற்றுலா பயிற்சிப் பட்டறை என்பவற்றுக்காக ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது என வடமராட்சிக் கல்வி வலய விசேட கல்வி ஆலோசகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் முற்றாக மீள்குடியேற்றப்படுவர்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கரவெட்டி)

யுத்தம், சுனாமி அனர்த்தம் மற்றும் பல்வேறு அனர்த்தங்களினால் எமது நாட்டில் வாழ்கின்ற மூவின மக்களும் பெரும் இழப்புக்களை சந்தித்துள்ளனர்.

குறிப்பாக தமிழ் மக்கள் வாழ்க்கையில் வர்ணிக்கமுடியாத பெருந்துயரங்களை அனுபவித்து இன்னும் மீள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களை படிப்படியாக அபிவிருத்திப் பாதைக்கு அழைத்துச் செல்வதற்கு தான் கடுமையாக உழைத்து வருவதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 45 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக 10ஆயிரம் பேருக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. செட்டிக்குளத்தில் ஆரம்பித்த எமது பயணம் இன்று பருத்தித்துறை வரை வந்தடைந் துள்ளது.

இதேபோன்று வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இவ்வாறான உதவிகளை தொடர்ந்தும் வழங்குவோம். யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை படிப்படியாக மீள்குடியேற்றம் செய்து வருகிறோம். மிகவிரைவில் முற்றாக மீள்குடியேற்றம் செய்ய அனைத்து ஏற்பாடுகளையும் எமது அமைச்சு ஊடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

தடுப்புமுகாம்களில் உள்ள 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவி இளைஞர்களின் விடுதலைக்காக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தமையால் இதுவரை 5 ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் ஏனையோரை மிக விரைவில் விடுதலை செய்ய துரிதமாக செயற்படுவேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-3-24)




# சுனாமிப் பேரலையின் 6ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள்

(கொழும்புத்துறை)

இலங்கை வங்கி மற்றும் மல்லாகம், தெல்லிப்பளை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் "மீண்டும் எழுவோம்" சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் 6ஆவது ஆண்டு நினைவுதினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு காங்கேசன்துறைவீதியில் உள்ளதுர்க்காபுரம் சிற்பாலய கலைக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி உலகையே அதிரவைத்த ஆழிப்பேரலை, அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் பூமி அதிர்வுகள், வெள்ளப்பெருக்கு, எரிமலைகளின் சீற்றம், காலநிலை மாற்றம், தொடர்ந்து வரும் இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கு முகம் கொடுப்பது எப்படி? எம்மைப் பாதுகாப்பது எப்படி? மீண்டும் எழுவது எப்படி? இவைகள் சம்பந்தமான ஆய்வரங்கு நிகழ்த்தப்படவுள்ளது.

அத்துடன் வரலாற்று பதிவான சுனாமி 2004 சிற்பத்தின் முன்பாக பாதிக் கப்பட்டவர்களது வழிபாட்டு நிகழ்வுகள் நடை பெறவுள்ளன.

தொடர்ந்து சிற்பக் கலைஞர் ஏ.வி. ஆனந்தனின் உலகப் புகழ்பெற்ற பல அரிய சிற்பப் படைப்புக்கள் இங்கு காட்சிக்கு வைக்கப் படவுள்ளதாக விழாக் குழுவினர் தெரிவித்தனர். (ஸ்ரீ-3-51)

# அடிக்கடி ஏற்படும் மின் தடையால் அசௌகரியத்துக்குள்ளாகும் மக்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் சீரற்ற மின்சாரம் வழங்கப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதி மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதனால் பாடசாலை மாணவர்களும் மற்றும் மக்களும் குப்பிவிளக்கு மூலமாகவே தம் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அவலநிலை உள்ளது.

இரவிலும், காலை நேரங்களிலும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி திடீர் திடீரென மின்சாரம் தடைப்பட்டதால் இம்முறை கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

எனவே உரிய தரப்பினர் இவ் விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-10)

# பருத்தித்துறை – யாழ். வீதியில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலையம் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை யாழ்.வீதியில் புறாப் பொறுக்கிப் பகுதியில் இந்த நிரப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

எரிபொருள் நிலைய திறப்புவிழாவிற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தலைவர் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-3-[illegible])

# நல்லின கோழிக் குஞ்சுகளை பெற்றுக்கொள்வதற்கான பதிவுகள்

கால்நடைவள அமைச்சினால் இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டு இருக்கும் ஒருநாள் பேட்டுக் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இக் கோழிக்குஞ்சு ஒன்று 230 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது எனவும் இதனைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் பிரதேச கால்கநடை வைத்தியநிலையத்தில் தாம் கொள்வனவு செய்யும் கோழிக்குஞ்சுகளுக்கான முழுப் பெறுமதியைச் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூர்வ சந்திர கிரகணம்

சூரியனிடமிருந்து நிலவுக்குச் செல்லும் ஒளிக்கதிர்களை பூமி மறைக்கும் சந்திர கிரகணம் 372 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த 21ஆம் திகதி அதிகாலை இடம் பெற்றது.

இது போன்ற சந்திர கிரகணம் 372 ஆண்டுகளுக்கு முன்பு குளிர் காலத்தில் தோன்றியது. தற்போதும் கடுமையான குளிர் காலத்தில் இந்தக் கிரகணம் நிகழ்ந்தது. 2094ஆம் ஆண்டு வரை இது போன்ற சந்திர கிரகணம் நிகழாது. இந்த சந்திர கிரகணத்தின் போது சூரியனின் ஒளிக்கதிர்கள் நிலாவின் மீது விழாது. பூமி மறைந்து கொள்ளும். கடந்த 21ஆம் திகதி அதிகாலை 2.40 மணியிலிருந்து 3.53 மணி வரை முழு சந்திர கிரகணம் தெரிந்தது. இது சுமார் 72 நிமிடங்கள் நீடித்தது. பூமியின் நிழலில் தாமிரம் போன்ற நல்ல சிவப்பு நிறத் தில் நிலா காணப்பட்டது. அன்று வானம் தெளி வாக இருந்ததால் வட அமெரிக்கர்கள் இந்த சந்திரகிரகணத்தை நன்றாக பார்க்க முடிந்தது. இந்த சந்திர கிரகணம் இந்தியாவில் தென்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# ஐ.நா.ஆலோசனைக்குழுவின் நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லை

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகளில் நம்பிக்கை இல்லை என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

உலகின் முக்கிய நாடுகளின் முகவராகவே இந்தக்குழு செயற்படுவதாகவும் மகிந்த ராஜபக்ஷவை பாதுகாக்கும் நோக்கிலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போரிற்கு பான் கீ மூன் உள்ளிட்ட முக்கிய உலக சக்திகள் ஆதரவு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா ,இந்தியா,பிரிட்டன் போன்ற நாடுகளும் பான் கீ மூனும் இணைந்து இலங்கைப் போரின் போது அரசாங்கத்திற்கு நிதி உதவிகளையும் ஆயுத உதவிகளையும் வழங்கியதாக சுட்டிக்காட்டிய அவர் இந்த விடயங்களை அறிந்திராத விமல் வீரவன்ச பான் கீ மூனுக்கு எதிராக குரல் கொடுத்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

(ஸ்ரீ-4)

# 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மாருதம் சஞ்சிகை வெளியீடும்

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மாருதம் சஞ்சிகையின் 11 ஆவது இதழ் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 .30 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் தமிழ்மணி அகளங்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி. எஸ். எம். சாள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வளாக முதல்வர் இ. நந்தகுமாரன் , கல்வியற் கல்லூரி பீடாதிபதி க.பெர்னாட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலர் அ. சிவபால சுந்தரன், சமூக சேவை மாமணி நா. சேனாதிராஜா, சிவ நெறிப் புலவர் சி.எ. ராமஸ்வாமி, மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் க.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மாருதம் சஞ்சிகை வெளியீட்டு உரையை விரிவுரையாளர் எம். சூசைதாசன் ஆற்றவுள்ளார்.

அத்தோடு இக் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் *கலை இலக்கிய செல்வர் விருந்தினை உடுவை எஸ். தில்லை நடராஜாவும் நாடகக் கலைச் செல்வர்* விருதினை எம்.பி.தைரியநாதனும் பெறவுள்ளனர்.

இங்கு கலை நிகழ்வுகளும் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)


சிகரம் Dan JAFFNA TODAY www.com

ஆகிய ஊடகங்களில் நேரடி செய்முறைப் பயிற்சியுடன்
யாழ் மண்ணில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற

**சிகரம் ஊடகக் கற்கைகள்**

அச்சு ஊடகவியல்
செய்தி சேகரிப்பு, எழுதுதல், நேர்காணல், சித்திரிப்பு

தொலைக்காட்சி ஊடகவியல்
வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சித் தயாரிப்பு, எழுத்துருவாக்கம், Editing

Computer Lab
Audio - Video Studio



வானொலி ஊடகவியல்
அறிவிப்புக்கலை, எழுத்துருவாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு, Editing

கணினி, இணையப் பயிற்சி
Microsoft Office, Internet, Email, Social Media etc.

ஒளிப்படக்கலை (Photography)
SLR, Digital Camera Techniques
Photo Editing, Studio Lab Training

சந்தைப்படுத்தல் (Marketing)
தொடர்பாடல் திறன் விருத்தி, விற்பனை நுட்பங்கள், விளம்பரக்கலை

Graphic Designing
பக்க / விளம்பர வடிவமைப்பு, மடல்கள், வரைகலை [PAGE MAKER, PHOTOSHOP, INDESIGN]

தொடர்பாடலுக்கான ஆங்கிலம்
சொற்களஞ்சிய விருத்தி, வாசிப்பு, வசன அமைப்பு, பேச்சுத்திறன், எழுத்து

10 வருட அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணைய ஊடக அனுபவத்துடன், சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரே ஊடகப் பயிற்றுவிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையிலான அனுபவமிக்க ஆசிரியர் குழாம்

3மாத கற்கைநெறி + 3மாத பணியிடப் பயிற்சி
பயிற்சிநெறி முடிவில் தொழில் உத்தரவாதம்

சுயவிபரக்கோவை, தொடர்பு இலக்கத்துடன் விண்ணப்பங்களை அனுப்பி வையுங்கள்

**சிகரம் ஊடக இல்லம்**
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், தொ.பே.: 021 300 80 60,
நேரடி: 077 77 33 931, மின்னஞ்சல்: SikaramMedia@gmail.com
MEDIA



**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய்**

**கேள்வி விண்ணப்பம் கோரல் திருத்தம்**

*23.12.2010 திகதிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட கூறுவிலை கோரல் விளம்பரத்தில் வடிசாலைப் பொறித் தொகுதி திருத்தம் சேவிஸ் செய்வதற்கான கூறுவிலை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 14.01.2011 இற்குப் பதிலாக 04.01.2011 என்று திருத்தி வாசிக்கவும்.*

பொதுமுகாமையாளர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

(சி-1886)


# 53 ஆவது பிறந்தநாள் நினைவு தினம்



## அமரர் தோழர் றொபேட்

## தம்பிராசா சுபத்திரன்

(ஈ.பி.ஆர்.எல்.எவ்.மத்திய குழு உறுப்பினர், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர்)

தேச விடுதலையை நேசித்து மானிட தர்மத்தை மதித்து நின்றதால்

ஏக பிரதிநிதித்துவத்தின் எதிரியானாய் - இடர்களின் நடுவேயும்

தஞ்சமென மண்டியிடாது தலைநிமிர்ந்து நின்று வீர காவியமானாய்

காற்றில் கலந்த போதும் சாய்ந்துவிட்ட வல்லாதிக்கம் - உன்

கருத்தின் வலிமையை பறைசாற்றி நிற்கின்றது

இனி நிமிர்ந்தெழும் நீ உயர்த்திப் பிடித்த மானிட தர்மம்

**தோழர்கள், நண்பர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பூகோள வெப்பமாதல் (Global warming)


*(கடந்த 10ஆம் திகதி தொடர்ச்சி)*

சூரியனிலிருந்து வருகின்ற புற ஊதா கதிர்களின் 99%மான கதிர்களை ஓசோன் படையானது வடிகட்டுகின்றது. ஓசோன்படையில் துளை உருவாகும் போது புற ஊதா கதிர்கள் பூமியை அடைவதனால் வளிமண்டல வெப்பநிலை அதிகரித்து பூகோள வெப்பமாதலிற்கு வழி சமைக்கின்றது. கைத்தொழில் மய நாடுகளில் அதிகளவு CFC வாயு வெளியேற்றப்படுவதனால் ஓசோன்படை சிதை வடைகின்றது. இன்றைய காலகட்டத்தில் ஓசோன்படையானது வருடமொன்றிற்கு சராசரியாக 0.26% சதவீதத்தினால் சிதைவுறுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பூகோள வெப்பமாதல் பல்வேறு விளைவுகளை சூழலிற்கும் உயிரினங்களிற்கும் ஏற்படுத்துகின்றன. பூமியின் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படுவதனால், காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. புவியின் வெப்பநிலை அதிகரிப்பினால் துருவப் பகுதிகளிலுள்ள பனிப்பாறைகள் உருகுவதனால் கடல்மட்டம் உயருகின்றது. இதனால் கரையோரப் பகுதியிலுள்ள விளைநிலங்கள் மற்றும் வாழிடங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படுகிறது. $CO_2$ வாயுவின் அதிகரிப்பானது தாவரங்களின் மூலம் காபன் பதித்தலையும், சேமிப்பையும் தூண்டுவதுடன் ஒளித்தொகுப்பு வீதத்தையும் அதிகரிக்கின்றது. இதனால் இளம் தாவரங்களின் வளர்ச்சி அதிகரிக்கிறது. வெப்பநிலைமாற்றமானது பல்வேறு வகையான நோய்களை மனிதர்களிற்கு ஏற்படுத்தலாம். அவையாவன இதயநோய், சுவாசநோய் மற்றும் ஓசோன் படை அழிவினால் பூமியை வந்தடைகின்ற புறவூதாக் கதிர்களினால் ஏற்படும் தோல் புற்றுநோய் (Skin Cancer), கண் பார்வைக் குறைபாடு என்பனவாகும்.

வெப்ப அலைவுகள் அதிகரிக்கும் இடங்களில் வறட்சி (drought), புயல் (Cyclone), கடல் மட்டம் உயருதல் (rise in sea level) என்பன ஏற்படுகின்றன. அத்துடன் காலநிலை மாற்றமானது விவசாயத்திலும், உணவு உற்பத்தியிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

பூகோள வெப்பமாதலை பல்வேறு வழிகளில் கட்டுப்படுத்தலாம். மேலைத்தேய நாடுகளில் நிலக்கரியை எரியூட்டுவதன் மூலம் மின்சாரம் பெறப்படுகின்றது. நாம் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவைக் குறைப்போமானால் நிலக்கரி எரியூட்டல் அளவும் குறையும். இதன்மூலம் சுத்தமான வளியை சுவாசிப்பது மட்டுமல்லாது பூகோள வெப்பமாதலையும் கட்டுப்படுத்தலாம். நிலக்கரிக்குப் பதிலாக மாற்று வளங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தைப் பெறுதல், எரிபொருள் பாவனையைக் குறைத்து, எரிபொருளின் பூரண தகனம் நடை பெறுதல் உறுதி செய்யப்பட் வாகனங் களை பாவனையில் ஈடுபடுத்தல் போன்ற நடைமுறைகளும் பூகோள வெப்பமடைதலைக் குறைக்கும். எந்தவொரு பாவனைப் பொருட்களையும் குறைத்தல், மீள் பாவனை, மீள்சுழற்சி Reduce-Reuse-Recycle என்ற தத்துவத்தின் அடிப்படையில் பயன்படுத்தினால், புவியை பூகோள வெப்பமாதலிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.



Expected impacts of global warming

2009ஆம்ஆண்டு டிசம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான முக்கியத்துவமிக்க உச்சிமாநாடு டென்மார்க் தலைநகர் கோபன் கேஹனில் நடைபெற்றது.

இதில் 2050 ஆம் ஆண்டிற்குள் காபன் வெளியீடுகளை கணிசமான அளவு குறைக்க உலக நாடுகளிடையே உடன்பாடு எட்டப்பட்டது. உலகிலுள்ள அனைத்து நாடுகளும், அங்குவாழும் மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டால் பூமியின் வெப்பநிலை உயர்வதைக் குறைத்து பூகோள வெப்பமாதலிலிருந்து உலகைக் காப்பாற்ற முடியும். ☒

**ஆரணி பில்வமங்களம்,**
உதவி விரிவுரையாளர்,
இரசாயனவியற் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 34

**மேரி இப்போது ஜோனை விட 15 வயது மூத்தவள், 6 வருடங்களுக்கு முன் ஜோன் மேரியை விட 6 மடங்கு இளையவன். மேரியின் இப்போதைய வயது என்ன?**

**விடைகளை 04.01.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 33க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
துஷியங்கா தெய்வேந்திரம்
36, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**புதிர் 33 இற்கான விடை: 1**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல . 34**

சரியான விடை : ..............................
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொ.பே. இல : ..............................
கையொப்பம் : ..............................

# மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கையர்களின் நிலைமை

## அம்பலமாகும் உண்மைகள்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் பணி புரியும் நூற்றுக் கணக்கான இலங்கைப் பணியாளர்கள் தமக்குரிய மாதாந்த வேதனத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் அதேவேளை சரியான உணவு, ஓய்வு இன்றி கஷ்டப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பலர் அங்கு உளவியல் ரீதியிலான தாக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பலர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகியுள்ளனர் எனவும் யூ.ஸி.ஏ.நியூஸ் என்ற ஆங்கிலச் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இவ்வாறு பணி புரிவோரில் வருடாந்தம் சுமார் 2 ஆயிரம் பேர் வரை பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த நிலையில் இலங்கை திரும்புவதாகவும் அந்தச் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் 1.3 மில்லியன் இலங்கையர்கள் பணி புரிகின்றனர். இவர்கள் தமது உழைப்பாக வருடாந்தம் 3 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கின்றனர் எனவும் அந்தச் செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)

## தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 158ஆவது ஜயந்தி

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 158ஆவது ஜயந்தி தினம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுகள் காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை இடம்பெறவுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் இருவருக்கு புதிய துவிச்சக்கரவண்டிகளும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-...)

# புலிகளின் சொத்துக்களை அரசுடைமையாக மாற்றி சம்பள உயர்வை வழங்கலாம்

## ரணில் ஆலோசனை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை அரசுடைமையாக மாற்றினால் சம்பள உயர்வை வழங்குவது கடினமாக அமையாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போது கே.பி.யைப் பயன்படுத்தி சம்பாதிப்பதாகவும் அந்தப் பணம் சம்பள உயர்வை வழங்குவதற்காக பயன்படுத்தப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

தேசிய பொதுச் சேவைச் சங்கத்தின் [illegible] கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புலிகளின் சொத்துக்களைக் கைப்பற்றி அரசுடைமையாக்குவதாகவும் சம்பளத்தை அதிகரிப்பதாகவும் வழங்கப்பட்ட இரண்டு வாக்குறுதிகளையும் அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்துவெளியிட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தொழிற்சங்கங்களை வலுப்படுத்தவேண்டிய காலம் தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் உரிய கவனம் செலுத்தத் தவறியுள்ளதால் கட்சிபேதமின்றி அனைத்துத் தொழிற்சங்கங்களும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜப்பானிய முதலீடுகள் அதிகரிக்கும்

## ஜப்பானிய பாராளுமன்றக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஜப்பானிய கம்பனிகளின் முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய பாராளுமன்ற உறுப்பினர்கள்குழு தெரிவித்துள்ளது.

ஜப்பான்-இலங்கை நட்புறவு பாராளுமன்ற ஒன்றியத்தின் சார்பில் இலங்கை வந்துள்ள ஜப்பானிய ஜனநாயகக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள்குழு நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போதைய அமைதிச் சூழலை எடுத்துரைத்து வடக்கு -கிழக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ஜப்பானியக் கம்பனிகளின் முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதாக அக்குழு குறிப்பிட்டது.

ஜப்பானிய முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான ஹிரோபி யூமி ஹிரானோ தலைமையிலான எட்டுப் பேர் கொண்ட குழு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

வடக்கு- கிழக்கு மற்றும் தென்பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே இந்தக்குழு நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்னவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இலங்கையின் முதலீட்டுத் துறை தொடர்பில் அறிந்து கொண்டதாகவும் வடக்கு- கிழக்கின் உட்கட்டமைப்பு வளங்களை மேம்படுத்த வேண்டுமென்று கூறிய ஹிரானோ கூடுதல் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் தற்போதைய சுமுக உறவை மேலும் வலுப்படுத்துவதே தமது விஜயத்தின் நோக்கமாகுமென்றும் தெரிவித்த அவர்,

ஜப்பானின் புதிய முதலீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை, கைத்தொழில்துறை ஆகிய வற்றில் கூடுதல் முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## விவசாய குழுக்கூட்டம்

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலக விவசாய குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கரவெட்டிப்பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் விவசாய அதிகாரிகளும் விவசாய திணைக்கள தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## தரம் 1 மாணவர் அனுமதி

(அல்வாய்)

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்கான அனுமதி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளது என பாடசாலை அதிபர் கா. ராமஜயம் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-19)

# அமைச்சர்கள் உட்பட ஆளும் கட்சி எம்.பிக்கள் 20 பேர் ரணிலுடன் இரகசியப் பேச்சுவார்த்தை

## ஐ.தே.க.எம்.பி. ஹரீன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச தரப்பில் அதிருப்தி அடைந்திருக்கும் சில சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட சுமார் 200 ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இரகசியமாக சந்தித்து உரையாடியுள்ளதாக பதுளை மாவட்ட ஐ.தே.க. உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதியன்று நாட்டின் அரசியல் மாற்றத்துக்கான ஆரம்பம் உதயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று அரசாங்கத்திற்குள் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது. அதை மூடி மறைப்பதற்காக அரசாங்கம் ஐ.தே.க. கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளதாக நாட்டுக்கு காட்ட முற்படுகிறது.

அரசாங்கத்தின் அதிகாரம் ஒரு சிலரது கைகளுக்குள்ளே வைக்கப்பட்டிருப்பதாக அதிருப்தி அடைந்துள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் உட்பட்ட 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் தனியாகவும் இணைந்தும் இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த வார,இறுதியில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் மாகாண சபை அமைச்சர்கள் , கட்சியின் அமைப்பாளர்கள் ஆகியோர் கட்சியின் செய லாளருடன் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டதுடன் வெளிநடப்பும் செய்திருந்தனர்.

எதிர்காலத்தில் கட்சியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ள அவர்களின் நடவடிக்கைகளினாலேயே ஆளும் கட்சி அதிகாரத்திலிருக்கும் நகர சபைகள், பிரதேச சபைகளின் வரவு- செலவு திட்டம் தோல்வியடைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## வடக்கு அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்படுகிறது

### எஸ்.பி.திவாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கின் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்ட தன் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வட மாகாண அபிவிருத்தி தொடர் பான ஜனாதிபதி செயலணியின் செயலாளர் எஸ். பி.திவாரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச மூலம் வடக்கு அபிவிருத்திப் பணிகளின் நிலைமையை அறிந்து கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்தியா மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வீடமைப்பு திட்டங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை காலவரையறையின்றி இடம்பெயர் முகாம்களில் தடுத்து வைக்க அரசாங்கம் முயற்சிப்பதாக சிலர் சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கு- கிழக்கில் வெறுமையாகவுள்ள பகுதிகளில் சிங்கள மக்கள் மீள் குடியமர்த்தப்படவேண்டும்

## என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

பிரபாகரன் ஆயுதத்தால் பெற முயற்சித்ததை தற்போது மிக சூட்சுமமான முறையில் வேறு சிலர் பெற முயற்சிக்கின்றனர் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர நேற்று முன்தினம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் உரையாற்றிய அவர்,

தென்மாகாணம், மேல் மாகாணம் ஆகிய பகுதிகளிலேயே பெரும் எண்ணிக்கையான மக்கள் வாழ்க்கின்றனர். சிங்கள மக்களுக்கு காணிகள் இல்லாமை காரணமாகயானைகளுக்கும்மக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்படுகின்றன. இந்தளவுக்கு காணிப்பிரச்சினை சிங்கள மக்களுக்கு உள்ளது.

தமிழ், சிங்களம் உட்பட நாட்டில் வாழும் அனைவருக்கும் வடக்கு-கிழக்குச் சென்று அங்கு வாழும் அடிப்படை உரிமை இருக்க வேண்டும். ஏனெனில் அங்கு பெருமளவு நிலப்பரப்பு காணப்படுகிறது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்கள் அதிக சேவை செய்துள்ளனர். அவர்கள் இராணுவத்தில் இணைந்து நாட்டை மீட்கப்போராடினர். நாம் நன்றியுள்ளவர்கள் என்றால் அவர்களை, அவர்களது குடும்ப அங்கத்தவர்களை இந்தப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று குடியமர்த்த வேண்டும்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வெறுமையாகக் காணப்படும் பெரும் நிலப்பரப்பில் இவர்கள் குடியமர்த்தப்படவேண்டும். எதிர்காலத்தில் இனவாதிகள் ஈழமொன்றை அமைப்பதற்கு இடமளிக்காமல் இந்தப் பகுதிகளில் சிங்கள மக்களை குடியிருக்கச் செய்வது முக்கியமாகும். இது இனவாதமல்ல நன்றிக் கடன் செலுத்துவதைப் போன்றதாகும்.

இந்த நாட்டை மீட்டது யுத்தத்துக்கு எதிரானவர்களோ அரச சார்பற்ற நிறுவனங்களோ அல்ல இந்த இளைஞர்களே.

ஆகவே இந்த நாட்டில் எங்கு சென்றும் வாழ்வதற்கான முழு உரிமை அந்த இளைஞர்களுக்கு உண்டு. தெற்கிலுள்ள மக்களுக்கு வேறு இடங்கள் இல்லை.

அத்துடன் இந்த இராணுவ இளைஞர்கள் வடக்கு-கிழக்குச் சென்று வாழ்வதை இராணுவக் குடியிருப்புக்கள் எனவும் கூற முடியாது என்றார்.

(ஸ்ரீ-2)

# வடக்கில் ரயில்பாதை நிர்மாணப்பணிகளில் 200 இந்தியப் பொறியியலாளர்கள்

(கொழும்பு)

வடக்கில் புகையிரதப்பாதை நிர்மாணப் பணிகளில் சுமார் 200 இந்தியப் பொறியியலாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இந்திய புகையிரத நிர்மாணக்கம்பனியினால் இப் பாதை நிர்மாணிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் மேலும் 100 தொழில் நுட்பவியலாளர்களும் இலங்கையைச் சேர்ந்த 100 பொறியியலாளர்களும் பங்குபற்றுவர் எனவும் மேற்படி நிறுவனப் பொதுமுகாமையாளர் எஸ்.எல்.குப்தா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஓமந்தையில் இருந்து வடக்கு நோக்கி அமைக்கப்படும் புகையிரதப்பாதைக்கு 185 .3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என் மதிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை மதவாச்சியில் இருந்து மடு வரையான புகையிரதப் பாதைக்கு 81.3 மில்லியன் டொலர்களும் அங்கிருந்து தலைமன்னார் வரையிலான புகையிரதப்பாதைக்கு 149.8 4 மில்லியன் டொலர்களும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள் ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இப்பாதைகள் அமைக்கப்படுகின்றன.

மேற்படி இந்தியப் பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்களில் பலர் ஏற்கனவே இலங்கைக்கு வந்து பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரம் தொழிலாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் எஸ்.எல்.குப்தா தெரிவித்தார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அகில இலங்கை சைவப் புலவர் சங்கப் பொன்விழா சைவமகாநாடு அண்மையில் யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சைவ பரிபாலன சபைத் தலைவர் த.சண் முகலிங்கம் மங்கல விளக் கேற்றுவதையும் சிவஸ்ரீ மகாலிங்க சிவக்குருக்கள் அருகில் நிற்பதையும் வலம்புரி நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் கதாப்பிரசங்கப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவன் ஸ்ரீ.பிரதீஸ்வரனுக்கு விருது வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# யுத்தகாலத்தில் பெருமளவு தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன

## தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தத்தி னால் மனித உயிர்கள் மட்டுமல்ல பயன் தரும் மரங்களும் அழிக்கப்பட்டுள்ளன என தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ் பகுமார தெரிவித்துள்ளார்.

தெங்கு அபிவிருத்தி அமைச்சின் அனு சரணையுடன் தெல்லிப்பழைப் பிரதேச செய லகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னங்கன்றுகள் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெங்கு அபிவிருத்தி அமைச்சின் முக்கி யத்துவத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நன்கு அறிந்துள்ளார். இதுவரை காலமும் பெருந்தோட்ட அமைச்சின் கீழ் இயங்கி வந்த தெங்கு அபிவிருத்தி தற்போது தனித்துவம் பெற்றுள்ளது.

யுத்த சூழ்நிலையில் இராணுவத்தினரா லும் விடுதலைப்புலிகளினாலும் பெருமள வில் தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள் ளன. இவற்றின் மூலம் அமைக்கப்பட்ட பாது காப்பு அரண்களிலேயே அவர்கள் தங்கியுள் ளனர்.

விவசாயத்துறையில் பிரதியமைச்சராக இருந்த வேளையில் யாழ்ப்பாணம் , கிளி நொச்சி போன்ற பகுதிகளுக்கு விஜயம் மேற் கொண்டுள்ளேன். அந்தக்காலப்பகுதியில் இலவச உரமானியம், வயல் உழுதல்,ட்ரக்ர் கள் விநியோகம் என்பவற்றை எந்தவித பணமும் பெறாது வழங்க வேண்டும் என நினைத்தது உண்டு. ஆனால் தற்போது சிறு தொகை பணம் மற்றும் செலுத்தி பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி கற்ற காலங்களில் நாம் இன,மத, பேதங்கள் காட்டியதில்லை. எல்லோரும் சக நண்பர்களாவே வாழ்ந்தோம். அந்த நிலை தற்போது எமது நாட்டில் ஏற்பட்டுள்ளது. வட பகுதி மக்கள் தென்பகுதிக்கும் தென்பகுதி மக் கள் வட பகுதிக்கும் செல்லும் சூழ்நிலை ஏற் படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் பகுதியில் நடந்த கலவரங்கள் போன்று எமது பகுதியிலும் 1983ஆம் ஆண்டு கலவரங்கள் ஏற்பட்டன. அந்த சூழ் நிலையில் சிங்களவர்கள் சிங்களவர்களைக் கொன்ற னர்.அவர்களது பிணங்களை முழங் காலுக்கு மேல் தூக்கி செல்லக் கூட அனுமதி வழங்கப் படவில்லை. இவ்வாறு நாமும் பல துன்பங் களை அனுபவித்துள்ளோம்.

மீண்டும் எமது நாட்டில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனக் கருதியும் பல திட்டங்களை முன் னெடுத்து வருகிறோம்.

இதன் முதல் கட்டமாக தரம் 6இல் கல்வி கற்கும் மாணவி ஒருவருக்கு 5 தென்னங் கன்றுகளை வழங்கி அதைப் பராமரிக்கும் கையேடுகள்,உரம்,பயிற்சிகள் என்பன மூலம் அதனை அபிவிருத்தி செய்து தென்னை வளத்தை அதிகரிக்கவுள்ளோம். அத்தோடு சிறந்த முறையில் தென்னங்கன்றுகளை பராமரித்து வரும் மாணவர்களுக்கு உயர் தரப்பரீட்சையில் புலமைப்பிரிசிலும் வழங்க திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரி வித்தார். (ஸ்ரீ-6)

# கராத்தே போட்டியில் சம்பியனாக தெரிவு



(வல்வெட்டித்துறை)

இலங்கை கனிஷ்யுகு சொடோக்காண் கராத்தே சங்கத்தினால் நவலோகா உள்ளக அரங்கில் நடாத்தப்பட்ட 14ஆவது தேசிய ரீதியிலான கராத்தே நிகழ்வில் 18 வயதின ருக்கான சண்டைப்போட்டியில் வல்வெட்டித் துறை வல்வை விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த முரளி திவாகர் முதலாம் இடத்தைப் பெற்று 2010ஆம் ஆண்டிற்கான சம்பிய னாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் அண்மையில் நடைபெற்ற மாகாண தேசிய மட்டப்போட்டியில் தங்கம் மற் றும் வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-63)

# குப்தர்கால புத்தர் சிலை ஒன்று இந்தியாவால் இலங்கைக்கு அன்பளிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் குப்தர் ஆட்சிக் காலத்தை நினைவு படுத்தும் சாரநாத் பாணியிலான 16 அடி உயரமான விசேட புத்தர் சிலை ஒன்றை தலதாமாளிகைக்கு இந்தியா அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந் தத் தலதா மாளிகையின் சர்வதேச பௌத்த நூதனசாலையின் நுழைவாயிலில் இந்த விக்கிரகம் வைக்கப்படவுள்ளது.

இந்தியாவில் இருந்து சிற்பக் கலைஞர்க ளினால் வடிவமைக்கப்பட்ட இந்தச் சிலையா னது 5ஆம் நூற்றாண்டு குப்தர் ஆட்சிக் காலத்தில் சாரநாத்தில் வடிவமைக்கப்பட்ட விக்கிரகத்தை போன்றதாக அமைக்கப்பட் டுள்ளது.

சாரநாத்திலேயே கௌதம புத்தர் தனது முதலாவது போதனையை ஞானம் பெற்ற பின்னர் நிகழ்த்தியதாக கூறப்படுகிறது. வெளி றிய மண் நிறத்திலான மணற்கற்களை கொண்டு இந்தச் சிலை வார்க்கப்பட்டுள்ளது.

2600ஆவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு இந்த சிலை இலங்கைக்கு வழங் கப்படுகின்றது. இது தொடர்பில் இந்தியா வுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தனியார் பஸ்களில் இருந்து மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபா கப்பம் அறவீடு

## உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தனியார் பேருந்துகளில் இருந்து மாதம் 1500 மில்லியன் ரூபா கப்பம் அறவிடப் படு வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரதேசவாரியாக ஒரு சில அரசியல்வாதி களின் குண்டர் குழுக்களை ஈடுபடுத்தி இந்த கப்பம் அறவிடப்படுவதாக தனியார் பேருந்து உரிமையாளர்களின் சம்மேளனம் குற்றம் சாட்டியுள்ளது.

குறுந்தூர பேருந்து வண்டிகளில் இருந்து நாள் ஒன்றுக்கு 500 ரூபா வரையும் நெடுந்தூர போக்குவரத்தில் ஈடுபடும் பேருந் துகளில் இருந்து நாள் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபா வரையிலும் கப்பமாக அறவிடப் படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவி னால் நியமிக்கப்படும் அதிகாரிகளும் கப்பம் பெறுகின்றவர்களுக்கு உடந்தையாக இருப் பதுடன் இதனை தடுத்து நிறுத்த நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் பாது காப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலைக்கான நிர்மாணப்பணிகள் அடுத்தவருடம் ஆரம்பம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலை ஒன்றை அமைப்பதற்கான நிர்மாணப்பணி கள் அடுத்த வருட முற்பகுதியில் ஆரம்பிக் கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணை யாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வி. ஆர்.சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத் தும் முகமாகவே இந்த புதிய சிறைச்சாலை நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான நிதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகவும் நிர்மாணப்பணிகள் வருட முற்பகுதியில் ஆரம் பிக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணக்கோட்டையில் இருந்த சிறைச்சாலை கடந்த 1985ஆம் ஆண்டு சேதமடைந்ததுடன் பின்னர் கடந்த 1996இல் இரண்டுதனியார் வீடுகளில் தொழிற் பட்டது. தற்போது சொந்தக் காணியில் சிறைச்சாலை நிர்மாணிக்கப்படவுள்ளது என் றும் ஆணையாளர் நாயகம் தெரிவித் தார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் சுமார் 225 கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புதிய தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

சமூக பொருளாதார கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினால் இலவச தொழிற்பயிற்சி நெறிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்நிறு வனத் தினரால் வயறிங்,ரீவைண்டிங், தையல் இயந் திரம் திருத்துதல் ,கேக் ஐசிங் தயாரித்தல் , ஆண்,பெண்களுக்கான தையல் ,பெண்க ளுக்கான அழகுக்கலைப் பயிற்சி ,கழிவுப் பொருள் அலங்காரப்பொருட்கள் உற்பத்தி , கணனிப் பயிற்சி ,சாரதிப் பயிற்சி என்பன நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் இணைய விரும் புவோர் இல.249,நாவலர் வீதி,யாழ்ப்பா ணம் எனும் முகவரியில் சீடோ நிறுவனத்தில் உடன்பதிவுகளை மேற்கொள்ளுமாறு இந்நிறு வன பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் எண்ணெய்விலை அதிகரிக்கப்படமாட்டாது

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளபோதிலும் இலங்கையில் எண்ணெய்விலை அதிகரிக்கப்பட மாட்டாதென பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,

உலகச் சந்தையில் 83 அமெரிக்க டொலர்களாக இருந்த ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் இப்போது 91 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது . டீசல் ஒரு பீப்பாய் 93 அமெரிக்க டொலரிலிருந்து 102 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

மாதாமாதம் எரிபொருள் கொள்வனவுக்குப் பதிலாக வருடா வருடம் மொத்தமாக எண்ணெய் கொள்வனவு செய்வது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பில் சவுதி அரேபியா மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் பட்சத்தில் அதில் கிடைக்கும் அனுகூலங்கள் பொது மக்களுக்கும் கிடைக்க வழியமைக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.(ஸ்ரீ-2)

# வவுனியாவில் போலிக்கச்சேரி முற்றுகை; சந்தேகத்தின் பேரில் அறுவர் கைது

(கொழும்பு)

வவுனியாவில் போலிக் கச்சேரி ஒன்று நேற்று முன்தினம் முற்று கையிடப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கச்சேரி வவுனியா மூன்றாம் குறுக்குத்தெருவில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் அடையாள அட்டைகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அடையாள அட்டைகள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், திருமண பதிவுப் பத்திரம், மரண சாட்சிப் பத்திரம் போன்றன இங்கு கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யுத்த காலத்தின் போது இந்த இடத்தில் பெருந்தொகையான பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# இலங்கை மாலுமிகள் 11 பேர் விடுதலை

(கொழும்பு)

கடத்தப்பட்ட சவுதி அரேபிய நாட்டுக் கொடி தாங்கிய எம்.வி.அல் நிஸ்ர் அல் சவுதி என்ற கப்பலில் இருந்து 11 இலங்கை மாலுமிகள் நேற்றுக்காலை நாடு திரும்பியுள்ளனர். கப்பல் கடத்தப்பட்ட போது அதில் 13 இலங்கைப் பணியாளர்கள் இருந்தனர். இவர்களை சோமாலியக் கடற்கொள்ளை யர்கள் கடந்த 7ஆம் திகதி விடுவித்தனர்.

எனினும் இரண்டாவது அதிகாரியும் சமையற்காரரும் தமது சவுதி பயணத்தை தொடர்வதற்காக கப்பலில் தங்கி விட்டனர் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பந்துல ஜெயசேகர தெரிவித்தார்.

14 பணியாளர்கள் ,கிரேக்க தேசத்து கப் டன் ஆகியோருடன் ஜப்பானிலிருந்து ஜெட் டா நோக்கி சென்று கொண்டிருந்த இந்தக் கப்பல் ஏடன் குடாவில் வைத்து கடந்த மார்ச் மாதம் 3ஆம் திகதி கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)




சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை
பண்பாட்டுப் பேரவை
நடாத்தும்



## வருடாந்த திருவாசக விழா -2010

காலம் : 24-12-2010 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில்

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

தலைமையுரை : ஞானபண்டித சேவாசுரபி
வைத்தியகலாநிதி *சி.கதிரவேற்பிள்ளை*

சிறப்புச் சொற்பொழிவு

விடயம்: 'ஆர்கொலோ சதுரர்'

கலாநிதி *திருமதி மனோன்மணி சண்முகதாஸ்*
(யாழ்.பல்கலைக்கழகம்)

வாராந்த வெள்ளி நிகழ்வு

முருகன் அடியார்கள் நிகழ்த்தும் 'முருக நாம பஜனை'

குறிப்பு:
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும்
பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின்
திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும்
ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (சி-1884) பேரவை


# நாடும் நடப்பும்

## அதிகாரச் சன்னி

ஒரு விரல் நீளில் அதிகாரம்
இரு விரல் நீளில் நிட்டூரம்
மூவிரல் சேர்ந்த பரிவாரம்
முச் சனி யாட்சியில் முற்றிய சிலேற்பனம்
பித்தம் கலங்கிப்பின் ஞரட்டலில்
பெற்ற பெரும் பிதற்றலில்
நிற்கும் அணங்கெனக் கண்டு
தன்னின வழிவை சுமந்த வளென்று
பேயும் நடுங்கும்
பிற நாடும் சிரிக்கும்.

- அறியாதவன்




★1690 - யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துமஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப் பட்டனர்.

★1715 - சுவீடனின் துருப்புகள் நோர்வேயை ஆக்கிரமித்தன.

★1777 - கிரிட்டிமட்டி தீவு ஜேம்ஸ் குக்கினால் கண்டறியப்பட்டது.

★1851 - வோஷிங்டன் டிசியில் காங்கிரஸ் நூலகம் தீப்பிடித்ததில் பெறுமதியான நூல்கள் அழிந்தன.

★1906 - றெஜினால்ட் ஃபெசெண்டென் உலகின் முதலாவது வானொலி நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கினார்.

★1914 - முதலாம் உலகப் போர்: கிறிஸ்துமஸ் தினத்துக்காக போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.

★1924 - அல்பேனியா குடியரசாகியது.

★1941 - இரண்டாம் உலகப் போர்: ஹொங்கொங் ஜப்பானியப் படைகளிடம் வீழ்ந்தது.

★1941 - இரண்டாம் உலகப் போர்: மலேசியாவின் சரவாக் மாநிலத் தலைநகர் கூச்சிங் ஜப்பானியரிடம் வீழ்ந்தது.

★1951 - லிபியா இத்தாலியிடம் இருந்து விடுதலை பெற்றது. முதலாம் ஐட்ரிஸ் லிபிய மன்னனாக முடிசூடினார்.

★1953 - நியூசிலாந்தில் டாங்கிவாய் என்ற இடத்தில் தொடருந்து மேம்பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் அதில் சென்று கொண்டிருந்த தொடரூந்து ஆற்றில் வீழ்ந்ததில் 153 பேர் கொல்லப்பட்டனர்.

★1954 - லாவோஸ் விடுதலை பெற்றது.

★1966 - தெற்கு வியட்நாமில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று வீழ்ந்ததில் 129 பேர் கொல்லப்பட்டனர்.

★1968 - மூன்று விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்ற அப் பல்லோ 8 விண்கலம் சந்திரனின் சுற்று வட்டத்தில் நுழைந்தது.

★1974 - அவுஸ்திரேலியாவில் டார்வின் நகரில் சூறாவளி ட்ரேசி தாக்கியதில் 71 பேர் கொல்லப்பட்டனர்.

★1979 - ஆப்கானிஸ்தானின் கம்யூனிச அரசைக் காப்பதற்காக சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானை முற்றுகையிட்டது.

★1979 - ஐரோப்பாவின் முதலாவது விண்கலம் ஆரியான் விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★2005 - யோசப் பரராஜசிங்கம் படுகொலை: இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு தேவாலயம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புகள்

★1818 - ஜேம்ஸ் பிரிஸ்காட் ஜூல், ஆங்கில இயற்பியலாளர் (இ.1889)

★1822 - சார்ல்ஸ்ஹெர்மைட், ஒரு பிரெஞ்சு கணிதவியலாளர் (இ.1901)

★1837 - பவேரியாவின் எலிசபெத், ஆஸ்திரியாமற்றும் ஹங்கேரியின் அரசி (இ. 1898)

★1924 - முகமது ரபி, புகழ் பெற்ற இந்தியப் பின்னணிப் பாடகர் (இ. 1980)

★1957 - ஹாமித் கர்சாய், ஆப்கானிஸ்தான் குடியரசுத் தலைவர்

★1959 - அனில் கபூர், இந்திய நடிகர்

★1971 - ரிக்கி மாட்டின், ஸ்பானியப் பொப் பாடகர்

### இறப்புகள்

★1524 - வாஸ்கொடகாமா, போர்த்துக்கீச மாலுமி (பி.1460)

★1973 - ஈ.வெ.ராமசாமி, திராவிடர் கழகத்தினை தோற்றுவித்தவர் (பி.1879)

★2005 - ஜோசப் பரராஜசிங்கம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர் (பி.1934)

★2005 - பி.பானுமதி, தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1925)

★2008 - ஹரோல்ட் பிண்டர், நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (பி.1930)

*1987 ஆம் ஆண்டு இந்நாளில் தான் தமிழக முன்னாள் முதலமைச்சரும் திரைப்பட நடிகருமான எம்.ஜி. இராமச்சந்திரன் இறந்தார். (பி.1917)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் யாழ்ப்பாணக் கிளை நேற்று இல. 571, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புதிய கட்டடமொன்றிற்கு இடமாற்றப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்துவைப்பதையும் பிராந்திய ஆலோசகர் ராணி அரியநாயகம் உரையாற்றுவதையும் முதற்கொடுப்பனவை அமைச்சரிடம் கொடுத்து ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

## குழந்தை இயேசுவின் திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.அருள் ஆச்சிரமத்தில் அமைந்துள்ள குழந்தை இயேசுவின் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இன்றைய தினம் மாலை 4 மணிக்கு செபமாலையும் குழந்தை இயேசுவின் நவநாள் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப ஆசீர்வாதமும் திருநாட் திருப்பலியும் நடைபெறும். (ஸ்ரீ-2)

## தமிழர்களின் மனங்களை வெற்றிகொள்ள புலிச் சந்தேக நபர்களை விடுவியுங்கள்

### ஊவதென்னே சுமணதேரர் அறிவுரை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்மக்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் மனங்களை வெற்றிகொள்ள வேண்டுமாயின், விடுதலைப்புலிகள் என்ற குற்றச்சாட்டில் சிறைகளில் தடுத்துவைக்கப் பட்டுள்ளவர்கள் தொடர்பில் துரிதமான விசாரணைகளை நடத்தி, தவறு செய்யாதவர்களை விடுதலை செய்ய வேண்டும் என ஊவதென்னே சுமணதேரர் தெரிவித்துள்ளார்.

சுமணதேரர் மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார். இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

விடுதலைப்புலிகள் என குற்றம் சுமத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள, தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைவர் குறித்தும் விசாரணைகளை நடத்தி குற்றம் புரியாதவர்கள் அனைவரும் துரிதமாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் இதனை மேற்கொள்ளுமாயின் உண்மையான சமாதானத்தை நாடும் மக்களும் உணர்வார்கள். இவ்வாறான நடவடிக்கைமூலம் மக்களிடம் காணப்படும் அச்சம் நீங்கும்.சர்வதேச ரீதியாக அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களை குறைக்க முடியும்.

தற்காலிகமாக தான் அரசியலில் இருந்து ஒதுங்கி இருக்கப்போவதாகவும் எதிர்காலத்தில் சிறையில் உள்ள கைதிகளின் நலன்புரி நடவடிக்கைளில் ஈடுபடப் போவதாகவும் ஒரு வருடம் சிறையில் இருந்ததால் சிறைக் கைதிகள் அனுபவிக்கும் துயரங்களை தாம் நேரில் கண்டறிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள சுமணதேரர், புலம்பெயர் தமிழர்களை இலங்கையுடன் இணைக்கும் பாரிய பொறுப்பை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கை துரித பொருளாதார விருத்தியை நோக்கி பயணிக்கிறது

### ஜப்பான் - இலங்கை நட்புறவு குழுவிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை துரித பொருளாதார விருத்தி ஒன்றினை நோக்கி பயணிப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பான்- இலங்கை நட்புறவு பாராளுமன்றக் குழுவிடம் சுட்டிக் காட்டினார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜப்பான்- இலங்கை நட்புறவு பாராளுமன்றக் குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து உரையாற்றுகையில், நூற்றாண்டு காலமாக இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையே நிலவிவரும் கலாசார மற்றும் சமய ரீதியான உறவுகளில் புதிய திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்தி ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார உறவுகளை பலப்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக வலியுறுத்தினார்.

புதிதாக வளர்ச்சியடைந்து வரும் துறைமுகங்களை அண்டி புதிய ஜப்பான் முதலீட்டு வலயங்களை நிறுவுவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை என்பன தொடர்பாக ஜப்பான் தூதுக் குழுவினர் மகிழ்ச்சி தெரிவித்ததுடன் சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளிலே ஜப்பான் தொடர்ந்தும் இலங்கைக்கு உதவி வழங்குமென அவர்கள் தெரிவித்தனர்.

புதிய ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட உயர் தூதுக் குழுவொன்றுக்கு இலங்கை வருமாறு இதன்போது அழைப்பு விடுத்த ஜனாதிபதி இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு ஜப்பான் வழங்கிவரும் ஒத்துழைப்பிற்கு பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

(ஸ்ரீ-4)

## ஒளிவிழா

(கொழும்புத்துறை)

கோப்பாய் தெற்கு மாதா கோவில் ஒளி விழா எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு மேற்படி ஆலய பங்குத்தந்தை எஸ். ஆர். சந்திரபோஸ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வை மாதா கோவில் இளைஞர் மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-3-51)

## அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் உடன்பாடில்லை

### அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு



அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் தமக்கு உடன்பாடில்லை என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் கூட்டணிக் கட்சிகள் அங்கம் வகிப்பதனால் பாரியளவு அமைச்சர்களை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவு அமைச்சரவையை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயக நாடுகளில் இவ்வாறான கூட்டணிகள் காணப்படுவது வழமை எனவும் சர்வாதிகாரிகள் ஆட்சி செய்யும் நாடுகளில் ஒன்று அல்லது இரண்டு பேர் மட்டுமே ஆட்சி நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தற்போது ஆட்சி அரசாங்கத்தில் 16 கட்சிகள் அங்கம் வகிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும் பாரியளவு அமைச்சர்களை நியமித்திருந்ததாகவும் சௌமியமூர்த்தி தொண்டைமானை மட்டும் கூட்டணியாக கொண்டிருந்த காலத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி பாரியளவு அமைச்சரவையைக் கொண்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




"சுகவாழ்வுக்கான பயணம்" நிறுவனத்தினால் அண்மையில் உலக எயிட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இத் தினத்தில் சுலோகங்களை ஏந்தியவாறு நிறுவனத்தின் சுகாதாரக் கழக உறுப்பினர்கள் பங்குபற்றுவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்



3



## கவிப்பேரரசு வைரமுத்து

இரண்டு தூக்குச் சட்டிகளில் கஞ்சி. ஒரு தகரக்குடத்தில் குடிதண்ணீர் 'பாவங்கள் மொத்தம் ஐந்து; கள்ளிக் காட்டில் குடி தண்ணீரில் கை கழுவுவது ஆறாவது பாவம்' என்பது பேயத் தேவரின் தண்ணீர்க் கொள்கை.

கொஞ்சம் பின்பக்கம் சாய்ந்து கைக் கெட்டிய தூரத்தில் ஆவாரஞ் செடி வளைத்துப் பூவோடு குழை உருவிக் கசக்கித் தேய்த்துக் கைச்சுத்தம் செய்தார். பலங்கொண்ட மட்டும் முக்கி, தூக்குச் சட்டியின் மூடி திறக்க முயன்றான் மொக்கராசு. பித்தளை வாளியின் விலாப்புறம் துழாவிய பேயத்தேவர் கண்கள் ஏமாற்றம் கொண்டு பிதுங்கின.

"எங்கடா மறுமாத்தம்?"

'மறுமாத்த'-இந்த ஒரு சொல்லில் இருக்கிறது ஒடுக்கப்பட்ட ஜீவன்களின் உணவுமுறை கூட்டு- பொரியல்-வறுவல் வதக்கல்-பச்சடி-ஊறுகாய்-அப்பளம் என்றெல்லாம் விரிவுசெய்யப்பட்ட உணவுமுறையிலிருந்து வித்தியாசம் சொல்கிறது 'மறுமாத்தம்' என்ற ஒரு வார்த்தை. கஞ்சி-கூழ்-களி-சோறு இவற்றில் ஏதாவது ஒரு உணவு தயாரிக்க மட்டுமே வசதிப்பட்ட உழைப்பாளிகள் மிளகாய்-வெங்காயம்-துவையல்-கருப்பட்டி-வெல்லம்-வற்றல் தேங்காய்ச்சில் இவற்றில் ஒன்றை முந்தைய ஒரேவகை உணவுக்கு மாற்றமாகத் தொட்டுக் கொள்வது மறுமாற்றம்; அது வட்டாரவழக்கில் 'மறுமாத்தம்'. இதில் இரண்டு மறுமாத்தம் வைத்துச் சாப்பிடுகிறவன் வசதியானவன்; சொகுசுக் காரன்.

'மறுமாத்தம்' பற்றிக் கிழவன் விசாரித்ததும் மொக்கராசு சொன்னான் மூடிதிறக்கும் முயற்சி நிறுத்தி.

"நேத்து ஒரு தப்பு நடந்து போச்சில்ல..."

"என்னா?"

"கானத் தொவையல அரச்சு தூக்குவாளி அட்டத்துல அப்பிவிட்டாள்ல முருகாயிக்கிழவி... கஞ்சி குடிக்கமுன்ன அதக் காக்கா தின்டுபுடுச்சு. அதனால இன்னக்கி வேற ஒரு சூச்சிபண்ணியிருக் கன்ல..."

"ஆமா இவரு பெரிய சாணவாக்கியரு சூச்சி பண்றாகல்லாமில்ல... சூச்சி. கொண்டாடா இப்படி."

திறக்க முடியாமல் மொக்கராசு முக்கிய தூக்கு வாளியைத் தான் வாங்கித் திறக்கமுயன்று தானும் முக்கினார்.

முக்கலை மறைக்கவும் திறப்பதற்கு அவகாசமும் வேண்டி, "என்னடா அப்படிச் சூச்சி பண்ணின?" என்றார்.

"காக்கா கொத்தாம-தொவையல மூடிக்கு உள்ளயே அப்பச் சொல்லிட்டேன்."

"நல்லாத்தான் தொவையல் அரைப்பா முருகாயி, கானப்பயிறு மணக்க வறுத்து-அம்மியில வச்சு வலப்பக்கம் தட்டி இடப்பக்கம் தட்டி-லேசாத் தண்ணிதெளிச்சு-ஒரே பதத்துக்கு ஒண்ணா நசுக்கி-ரெண்டு காஞ்சமொளகா-இத்துனூண்டு புளி-ஒரு பல்லோ ரெண்டு பல்லோ பூண்டு எல்லாஞ்சேத்து இழுத்தரைச்சு-வண்டிமைப் பதத்துக்கு வந்தப்பறம் குழவிய அம்மியவிட்டு இறக்காம அதுலவே நிறுத்தி ஒரு பக்கமா ஒரஞ்சாச்சு இடக்கையால் குழவிசுத்தி வலக்கையால் வழிச்செடுத்து வட்டியில போட்டான்னா... அந்த வாசனையே கூப்பிடுமப்பா கூழ..."

பேயத்தேவர் தூக்குவாளி திறந்தார் ஆசையோடு. துவையல் மூக்கைத் தூக்குமென்று எதிர்பார்த்தார். சோளக்கஞ்சிக்கு ஊற்றிவைத்த நீர்மோரின் உள் அலை அடித்துக் கரைந்து போனதுமல்லாமல், நீர்மோரின் நிறத்தையே மஞ்சளாய் மாற்றியிருந்தது துவையல். பார்த்ததும் சோகத்தில் புன்னகை பூத்தார் பேயத்தேவர்.

"ஏலே கேணப்பயலே... இதாட ஒஞ் சூச்சி? வெளிய அப்பிவச்சிருந்தாலும் காக்கா தின்டது போகமிச்சமிருந்திருக்கும். இப்ப உள்ளதும் போச்சுடா நொள்ளக்கண்ணான்னு ஒக்காந்திருக்கியே"

மொக்கராசு பேசவில்லை; துவையலின் தற்கொலைய அவன் எதிர்பார்க்கவில்லை. "இரு தாத்தா..." என்றவன் படபடவென்று எழுந்தான். கிலுவைமரம் தாண்டியோடி இரண்டு மூன்று புதர் தேடி கொத்துவிரல்களாய் மொத்தமாய் நீண்டு வளர்ந்திருக்கும் 'கட்டக்கடகா' பறித்தான் கான மிளகாய்ச் செடியிலிருந்து பிஞ்சும் காயும் பிடுங்கினான்.

இரண்டையும் பாறையில் வைத்துக் கல்லொன்று எடுத்துக் கால்சட்டையில் துடைத்துத் தட்டினான். உப்பு...? அந்த ஆடம்பரத்துக்கு அங்கெங்கே போவது? தும்பைச் செடி பறித்து அதில் சாறு பிழிந்தான். தும்பைச் செடி பார்த்தது உப்பின் உத்தியோகத்தை. மூன்றையும் ஒன்றுசேர்த்ததில் 'மறுமாத்தம்' தயார்.

தூக்குவாளி மூடியில் அள்ளியோடிவந்து தாத்தா "மறுமாத்தம்..." என்றான். அவன்மீது ஒரு பாசப் பார்வை வீசிவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார் பெருசு.

கடைசிப் சோளப்பருக்கை வரை துழாவித் தின்று கஞ்சித் தண்ணியைத் தூக்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு ஆவாரங்குழையில் கைதுடைத்து வேட்டியின் ஒரு நுனியில் பெருசு வாய்துடைத்தபோது காடுகிழியக் கேட்டதந்தக் கூக்குரல்.

"பெருசு! எங்க பசுவு சாகக் கெடக்கு. எங்க அப்பன் ஒன்னைக் கூட்டியாரச் சொல்லுச்சு"

எதிர்த்த கரட்டில் சாலிமரத்தோடு இறங்கிய ஒற்றையடிப்பாதையில் ஓடிவரும் உருவம் பார்த்து, 'யார்ரா அவன்?' என்றார் பெருசு.

"நம்ம மாடுமாத்தி மகன் மாதிரி தெரியுது..." என்றான் மொக்கராசு தூரப்பார்வை பார்த்து.

கண்களை இடுக்கி தூரத்தில் பார்த்து மீசைக்குள் சிரித்துக்கொண்டே, "இல்லடா... அவன் சொட்டையன் மகன்..." என்றார் பெரிசு.

"எப்படித் தெரியும்" என்றான் மொக்கராசு எகத்தாளமாக.

"எனக்குத் தெரிஞ்சு தலையில கட்ன சிவப்புத் துண்ட அவுக்காம அலையிற ஒரே பய அவந்தாண்டா..." என்றார். அவன் நெருங்க நெருங்க அவர் அனுமானம் சரி யாயிற்று.

வந்தவன் மூச்சடைக்க நின்றான். "பெருசு! பெருசு!" என்றவன் அடுத்த வார்த்தைக்கு மீண்டும் மூச்சுவிட்டுக் கொண்டான். "எங்க பசுவு ஈத்துவலியெடுத்துக் கெடக்கு... கத்துது... முக்குது... கன்னுக்குட்டி வரமாட்டேங்குது. பேயத்தேவன் பெரியாம்பளையத்தவிர பசுவ யாராலயும் காப்பாத்த முடியாதுன்னு அனுப்பி வச்சிருக்கு எங்கப்பன்..."

பேயத்தேவர் எழுந்தார். தனக்குத்தானே முனகி அப்படியும் இப்படியும் தலையாட்டினார். பொழுது பார்த்தார்-ஏர்மாடு பார்த்தார்-பேரனைப் பார்த்தார்-

"மொக்க... ஏர்மாட்டை அவுத்து மேய விடுடா வாரேன்" என்றார்.

வார்த்தைகளைத் தேய்த்துத் தேய்த்து "நானும் வாரேன்..." என்றான் மொக்கராசு.

சற்றே யோசித்தவராய் "சரி அவுத்துவுடு மாட்ட தம் போக்குல மேயட்டும்" என்றார்.


சொட்டையன் மகன் கம்புகொண்டு முள் விலக்கி முன்னோட புதர்ப்பறவைகள் சிவ்வென்று சிறகடிக்க-காலடியில் சரள்கள் நொறுங்க-தாத்தா முன் நடந்தார்; பேரன் பின் தொடர்ந்தான். கரட்டின் மறுபுறம் துடித்த பசுவின் 'ம்மா' என்னும் குரலோசையில் காற்று நடுங்கியது கள்ளிக்காடெங்கும்.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்டோஸ் 7 மாறப் போறீங்களா!




மெதுவாக மக்களிடையே புதிய விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கும், ஒபீஸ் 2010 க்கும் மாற வேண்டும் என்கிற ஆசை வளர்ந்து வருகிறது.விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாற விரும்புகிறவர்கள் முன் உள்ள கேள்வி, இந்தப் புதிய சிஸ்டம் 32 பிட் ஆக இருக்கவேண்டுமா? அல்லது 64 பிட்டாக இருக்கலாமா? என்பதுதான். இந்தப் பிரச்சினை குறித்து இங்கு பார்க்கலாம்.

விண்டோஸ் 7 சிஸ்டம் மாற விரும்புபவர்கள், முதலில் எந்த எடிஷனுக்குமாறப் போகிறார்கள் என்பதனை முடிவு செய்திட வேண்டும்.குறைந்தது மூன்று வகையான பிரிவுகள் உள்ளன. விண்டோஸ் 7 ஹோம் பிரிமியம், விண்டோஸ் 7 புரபஷனல் மற்றும் விண்டோஸ் 7 அல்டிமேட். இந்த மூன்றில் விண்டோஸ் 7 ஹோம் பிரிமியம் சற்று விலை குறைந்தது. அல்டிமேட் விலை அதிகம்.

விலைக்கேற்ற வகையில் கூடுதல் வசதிகள் இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தனி நபர் பயன்பாட்டிற்கு, விண்டோஸ் 7 ஹோம் பிரிமியம் எடிஷனே போதுமானது.மற்ற இரண்டும் பெரும்பாலும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கணனி வல்லுநர்கள் பயன்படுத்தும் பல கூறுகள் உள்ளன. இதனை முடிவு செய்த பின்னரே, 32 அல்லது 64 பிட் சிஸ்டம் வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது.இந்த இரண்டுக்கும் என்னவேறுபாடு? கீழே காணலாம்.

♦ உங்கள் கணனியில்,64 பிட் இணையான சிபியு புரோசசர் இருப்பின், 64 பிட் விண்டோஸ் 7 எடிஷன் பதிய வேண்டும். இதற்கு கணனியுடன் வந்த குறிப்புரையில் சிபியு குறித்த தகவல்களைப் பார்க்கலாம். அல்லது கணனி வழங்கியவரிடம், 64 பிட் செக்கர் போன்ற புரோகிராம்களை இயக்கிப் பார்க்கலாம்.

♦32 பிட் சிஸ்டத்தில் ரம் மெமரி யூனிட் 4 ஜிகா பைட் வரையறையுடன் கிடைக்கிறது. அதாவது, இன்னும் கூடுதலாக ரம் மெமரியை நீங்கள் இன்ஸ்டோல் செய்தாலும், 4 ஜிகா பைட் மெமரி மட்டுமே செயற்படும். இதனை விலக்கி, கூடுதலாகச் செயற்பட வைக்க, நிறைய செட்டிங்ஸ் அமைப்பினை மேற்கொள்ள வேண்டும்.சாதாரணமாகப் பயன்படுத்துவோருக்கும் அது இயலாது. இந்த 4 ஜிகா பைட் ரம் மெமரியும் முழுமையாக விண்டோஸ் இயக்கத்திற்குக் கிடைக்காது. வீடியோ கார்ட் போன்ற சாதனங்கள் இந்த ரம் மெமரி இடத்தைத் தான் எடுத்துக்கொள்கின்றன.

மைக்ரோசொப்ட்,64 பிட் விண்டோஸ் 7 எடிஷனில்,ரம் மெமரியில் பயன்பாட்டிற்குக் கிடைப்பதனைத் தானாக வரையறை செய்துள்ளது.விண்டோஸ்7 ஹோம் பிரிமியம் எடிஷனுக்கு 16 ஜி.பி, அல்டிமேட் மற்றும் புரபஷனல் எடிஷனுக்கு 192 ஜிபி என வரையறுத்துள்ளது.

♦64 பிட் எடிஷனில் பல கூடுதல் வசதிகள் கிடைக்கின்றன. டேட்டா எக்ஸிகியூஷன் பாதுகாப்பு மற்றும் கெர்னல் பாதுகாப்பு ஆகியன தரப்பட்டுள்ளன. இதனால் நம் பயன்பாட்டின் போது என்ன தடை ஏற்பட்டாலும்,இழப்பு எதுவும் நேராது.

♦ சில தடைகளும் விண்டோஸ் 7 சிஸ்டம் இயங்குவதில் உள்ளன. இது சில பயனாளர்களுக்கு அதிக சிக்கலைக் கொடுக்கின்றன. விண்டோஸ்7 சிஸ்டத்தின், 64 பிட் எடிஷனில், 16 பிட் அப்ளிகேஷன்கள் இனி இயங்கவே இயங்காது. எனவே பல ட்ரைவர் அப்ளிகேஷன்கள் மாற்றப்பட வேண்டும். சில ஹார்ட்வெயார் சாதனங்களும் இணைந்து இயங்காத நிலை ஏற்படும். (தொடரும்)

## கணனிக்குப் புதியவரா பைல் வகைகள்



கணனியில் பல வகை பைல்கள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. ஒரு சிலவற்றையே நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். இதனால் தான் நம் நண்பர்கள் இமெயில் மூலமாக ஏதெனும் ஒரு பைல் அனுப்புகையிலும் வெப்தளங்களில் இருந்து ஒரு பைலை இறக்கிய சூழ்நிலையிலும் அந்த பைல் வகை என்ன? அது எதற்குப் பயன்படுகிறது? எந்த அப்ளிகேஷனில் அவற்றைத் திறந்து பயன்படுத்தலாம் போன்ற கேள்விகளுக்குப் பதில் இன்றி தேடுகிறோம். இங்கு சில முக்கிய பைல் வகைகள் அவற்றின் துணைப் பெயர்களுடன் தரப்படுகின்றன. பொதுவாக அவற்றைத் திறக்கும் அப்ளிகேஷன் பெயரும் உடன் தரப்படுகிறது.

.avi வீடியோ பைல். விண்டோஸ் மீடியா பிளேயர்

.bmp பட பைல். பெயின்ட் மற்றும் அடோப் போட்டோ ஷொப் போன்ற படங்களைக் கையாளும் அப்ளிகேஷன்களில் திறந்து பயன்படுத்தலாம்.

.cfg கொன்பிகரேஷன் பைல்.இதனைத் திறந்து பயன்படுத்தக் கூடாது.

.dat டேட்டா அடங்கிய தகவல் பைல். டேட்டாவினைக் கையாளும் எந்த ஒரு அப்ளிகேஷனிலும் இதனைத் திறக்கலாம்.

.doc டாகுமெண்ட் பைல். வேர்ட் தொகுப்பில் திறந்து பயன்படுத்தலாம்.

.exe எக்ஸிகியூட்டபிள் பைல். புரோகிராம் ஒன்றின் முதன்மையான பைல். இதில் டபுள் கிளிக் செய்தால் அந்த புரோகிராம் இயங்கும்.

.gif பட பைல். பெயின்ட் மற்றும் அடோப் போட்டோ ஷொப் போன்ற படங்களைக் கையாளும் அப்ளிகேஷன்களில் திறந்து பயன்படுத்தலாம்.

.htm இணையத் தளத்தில் வைக்கப்படும் டொகுமெண்ட். இன்டர்நெட் எக்ஸ்புளோரர் உட்பட எந்தப் பிரவுசரிலும் இதனைத் திறந்து பயன்படுத்தலாம்.

.html இணையத்தளத்தில் வைக்கப்படும். டொகுமெண்ட். இன்டர்நெட் எக்ஸ்புளோரர் உட்பட எந்த பிரவுசரிலும் இதனைத் திறந்து பயன்படுத்தலாம்.

.ini- டெக்ஸ்ட் கான்பிகர் செய்யக் கூடிய பைல். நோட்பாடில் திறக்கலாம்.

.jpeg/jpg பட பைல். பெயின்ட் மற்றும் அடோப் போட்டோ ஷொப் போன்ற படங்களைக் கையாளும் அப்ளிகேஷன்களில் திறந்து பயன்படுத்தலாம்.

.mov மூவி பைல். குயிக் டைம் அப்ளிகேஷனில் திறக்கலாம்.

.mpeg/mpg வீடியோ பைல். குயிக் டைம் மற்றும் விண் ஆம்ப் புரோகிராம்களில் திறக்கலாம்.

.mp3 ஓடி யோ பைல் விண் டோஸ் மீடியா பிளேயர் மற்றும் விண் ஆம்ப் போன்ற அப்ளி கேஷன்களில் திறக்கலாம்.

.pdf போர்ட்டபிள் டொகுமெண்ட் பைல்.அடோப் ரீடர் போன்ற பி.டி.எப். பைல்களைத் திறக்கும் எந்த சொப்ட்வெயர் புரோகிராமிலும் திறக்கலாம்.

.pps ஸ்லைட் ÷ ஷா பிரசன்டேஷன் பைல். பவர் பொய்ண்ட் புரோகிராமில் திறக்கலாம்.

.ppt ஸ்லைட் ÷ ஷா பிரசன்டேஷன் பைல். பவர் பொய்ண்ட் புரோகிராமில் திறக்கலாம்.

.sys சிஸ்டம் பைல். திறக்கவேண்டாமே.

.txt டெக்ஸ்ட் பைல்.நோட்பாடில் திறக்கலாம்.

.wav ஓடியோ பைல். விண்டோஸ் மீடியா பிளேயர் மற்றும் விண் ஆம்ப் போன்ற ஓடியோ புரோகிராம்களில் திறந்து பயன் படுத்தலாம்.

.xls ஸ்ப்ரெட் ஷீட் பைல்.எக்ஸெல் தொகுப்பில் பயன்படுத்தலாம்.

.zip சுருக்கப்பட்ட பைல். வின்ஸிப் புரோகிராம் பைல்களை விரித்துக் கொடுக்கும்.




## விண்டோஸ் எக்ஸ்பி, விஸ்டா இயக்கத் தொகுப்புகளுக்கான ரகசிய டிப்ஸ்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

♦கணனியை யார் ஷட் டவுண் செய்வது? (எக்ஸ்பி)

உங்கள் வீட்டில்அல்லது அலுவலகத்தில் உள்ள உங்களின் பேர்சனல் கணனியை உங்களைத் தவிர மற்றவர்கள் ஷட் டவுண் செய்வதனைத் தடுக்க, ஸ்டார்ட், கொண்ட்ரோல் பனல் சென்று, Administrative Tools செல்லவும். இங்கு Local Policies என்பதில் டபுள் கிளிக் செய்திடவும். பின்னர் Security Options என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.வலது புறம் 'Shutdown: Allow System to be Shut down with out having to log on' என்று இருக்கும் இடம் சென்று டபுள் கிளிக் செய்திடவும். அதன்பின்னர் Disabled என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

♦டிஸ்க் ட்ரைவ் மூலம் நேரத்தை மிச்சப்படுத்த (எக்ஸ்பி): உங்களுடைய சிடி அல்லது டிவிடி ட்ரைவிற்கான ஐகனை குயிக் லாஞ்ச் பாரில் வைக்கவும். இதற்கு மை கொம்பியூட்டர் சென்று, சிடி/ டிவிடி ஐகன் இழுத்து வந்து, டாஸ்க்பாரில் குயிக் லோஞ்ச் ஏரியாவில் விடவும். இதன்மூலம், சிடியில் எழுதப்படக் காத்திருக்கும் பைல்களை , இந்த குயிக்லாஞ்ச் பாரில் உள்ள ட்ரைவ் ஐகனைக் கிளிக் செய்து பார்க்கலாம். ட்ரைவ் ட்ரேயினைத் திறக்கவும் செய்திடலாம். இதேபோல எந்த ஒரு பைலுக்கும் போல்டருக்கும் ஷோர்ட்கட் ஐகன்களை, குயிக் லாஞ்ச் பாரில் வைத்திருக்கலாம்.

♦எர்றர் ரிப்போர்ட் நிறுத்த (எக்ஸ்பி): ஏதாவது புரோகிராம் கிராஷ் ஆகி, அதனை வலுக்கட்டாயமாக மூடிடுகையில், விண்டோஸ் இதற்கான ரிப்போர்டைத் தயார் செய்து அனுப்பவா என்ற பிழைச் செய்தியினைக் காட்டும். இந்த பிழைச் செய்தியினைக் காட்டாமல் இருக்கும்படி விண்டோஸ் எக்ஸ்பி இயக்கத்தினை அமைக்கலாம். ஸ்டார்ட், கொண்ட்ரோல் பனல், சிஸ்டம் எனச் செல்லவும். இங்கு கீழாக உள்ள எர்றர் ரிப்போர்டிங் பட்டனில் (Error Reporting) கிளிக் செய்திடவும். இங்கு இந்த பிழைச் செய்தி தோன்றுவதனை நிறுத்தவும் மீண்டும் இயக்கவும் செய்திடலாம்.

♦கீ போர்ட் ஷோர்ட் கட் கீகள்(விஸ்டா): பொதுவான சில இயக்கங்களை வேகப்படுத்தும் வகையில் விஸ்டா இயக்கம் பல ஷோர்ட்கட் கீ தொகுப்புக்களைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, விண்டோஸ் கீயினை அழுத்தியவாறே, ஸ்பேஸ் பார் தட்டினால், பின்னணியில் இருக்கும் ஸைட்பார், முன்னதாகக் கொண்டு வரப்படும். விண்டோஸ் கீயுடன் 'T'கீயை அழுத்தினால், டாஸ்க்பார் ஐட்டங்கள் ஒவ்வொன்றாகச் செல்லலாம். குயிக் லாஞ்ச் பாரில் உள்ள உள்ள புரோகிராம்களை இயக்க, விண்டோஸ் கீயுடன், குயிக் லாஞ்ச் பாரில், திறக்கப்பட வேண்டிய புரோகிராம் எந்த இடத்தில் உள்ளதோ (1,2,3,4.. என) அந்த எண்ணை அழுத்தினால்போதும்.

♦கூடுதல் கடிகாரம்(விஸ்டா): பன்னாடுகளில் அப்போதைய நேரத்தினை எப்போதும் அறிந்துகொள்ளவிருப்பமா? நோட்டிபிகேஷன் ஏரியாவில் உள்ள கடிகாரத்தின் மீது ரைட் கிளிக் செய்திடவும்.பின்னர் Adjust Date/ Time' என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து Additional Clocks என்பதில் கிளிக் செய்திடவும். இனி, ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட கடிகாரங்களைக் காட்டுவதற்கான ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். ஒவ்வொரு கடிகாரத்திற்குமான நேரமண்டலத்தை அமைத்துப் பின்னர் ஓகே கிளிக் செய்திடவும். இனி திரையில், உங்களுக்குப் பிரியமானவர்கள் வசிக்கும் நாட்டின் கடிகாரம், அந்தநாட்டின் நேரத்தைக் காட்டியபடி இயங்கிக் கொண்டிருக்கும்.

♦ஹெல்த் ரிப்போர்ட் பெற (விஸ்டா):

கணனியின் ஹார்ட்வெயார் மற்றும் பிற சாதனங்கள் குறித்த ஹெல்த் ரிப்போர்டினைப் பெறும் வசதியினை விஸ்டா கொண்டுள்ளது. இதன்மூலம் நம் ஹார்ட்வெயார் சாதனங்களின் தன்மையை அறிந்து கொள்ளலாம். ரிப்போர்ட் ஜெனரேட்டர் என்ற வசதியின் மூலம் இதனைப் பெறலாம்.

ஸ்டார்ட் கிளிக் செய்து, performance and information என டைப் செய்து , என்டர்தட்டவும். இங்கு இடது புறமாக உள்ள 'Advanced tools'என்பதில் கிளிக் செய்து, 'Generate a system health report' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.சிறிது நேரம் கழித்து, உங்கள் கணனியின் ஹார்ட்வெயார் குறித்த ஹெல்த் ரிப்போர்ட் உங்களுக்கு பைலாக கிடைக்கும். ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக்கூடாது. அது போலத்தான் பண்படாத அறிவும். - ஹோரஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஈழத்தமிழர் விடயத்தில் ராகுலின் அதிரடி அறிவிப்பு

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவேன் என காலஞ்சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகனும் இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்தபோதே மேற்கண்ட முக்கியமான விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதை சுட்டிக் காட்டியுள்ள ராகுல்காந்தி, இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துன்பதுயரங்கள் மிகவும் கவலை தருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த ராகுல்காந்தி திடீரென இவ்விதம் அறிவித்தமையானது இலங்கை தொடர்பில் வித்தியாசமான முடிபொன்றை இந்திய மத்திய அரசு எடுக்கவுள்ளமையை கோடிகாட்டுவதாகும்.

வன்னி யுத்தம் நடந்தபோதும், நடந்து முடிந்த பின்பும் ராகுல் காந்தி தமிழ்நாட்டிற்கு சென்றுள்ளார். அப்போதெல்லாம் ஈழத்தமிழர் தொடர்பில் அவர் எதனையும் குறிப்பிடவில்லை.

ஆனால் நேற்றுமுன்தினம் தமிழகத்துக்குச் சென்ற ராகுல் காந்தி அதிரடியாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவேன் எனக் கூறியுள்ளார். அவரின் இக்கூற்று சாதாரணமானதன்று.

ஏனெனில் மிக அண்மையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இந்திய மத்திய அரசு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கமாட்டாது எனத் தெரிவித்திருந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இங்கு வருகைதந்து இந்திய உதவித் தூதுவராலயத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்து விட்டு 13ஆவது அரசியல் அமைப்பே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாக இருக்குமெனக் கூறிவிட்டு சென்ற சில நாட்களில்,

சிவ்சங்கர் மேனன் இந்தியா, இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க மாட்டாது என தெரிவித்தார். ஆனால் இப்போது நிலைமை மிக மோசமாக மாறிவிட்டது. விக்கிலீக்ஸ் தெரிவிக்கும் அதிரடித் தகவல்களில் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா இழைத்த கொடுமைகள் என்று ஓர் இதிகாசம் எழுதினால் நேரு குடும்பத்தின் அடிப்படைக் கௌரவம் பறந்து போய்விடும்.

இதற்கு மேலாக இலங்கை அரசின் உறவு சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் பலம் பெற்றுவிட்டது. அதுமட்டுமல்ல–விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்கள் இலங்கை விவகாரத்தில் ஐ.நா.சபை கட்டாயம் தலையிடவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. கூடவே பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளும் 'விடாத பிடி' என்று ஐ.நாவை துரத்துகின்றன.

இந்நிலையில் இந்தியா ஒரு படி மேலே சென்று ஈழத்தமிழரைக் கவனிக்க வேண்டிய தேவையுள்ளது.

இவை யாவற்றுக்கும் அப்பால் '...தன் னெஞ்சே தன்னைச் சுடும்' என்ற பொய்யா மொழியும் ராகுல் காந்தியை உறுத்துகின்றது.

ஆகையால் விரைவில் ஒரு விடிவெள்ளி எழுவானில் தெரியும் என நம்பலாம். நம்புவோம்.

# நெல்லியடியிலிருந்து மாலு சந்தி வரையான வீதி தற்காலிகமாக மூடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்– பருத்தித்துறை வீதியின் விஸ்தரிப்பு பணிகளுக்காக நெல்லியடிச் சந்தியிலிருந்து மாலுசந்தி வரையான யாழ்– பருத்தித்துறை வீதியை இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும 31 ஆம் திகதிவரை தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கார்ப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகள் வேகமாக பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, இன்றிலிருந்து சகல விதமான வாகனங்களும் , பொதுமக்களும் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை மாற்று பாதையான நெல்லியடிச் சந்தியூடாக வதிரிச் சந்தியை அடைந்து பின்னர் மாலுசந்திவரை பயணிக்க முடியும்.

எனவே, இன்றிலிருந்து இவ்வீதியைப் பயன்படுத்தும் பிரயாணிகள் மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இந்நடைமுறையினைப் பின்பற்றி ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ–4)

# வழிகாட்டல் கருத்தரங்கு

கொழும்பு சட்டக்கல்வி வட்டத்தினால் இலங்கை திறந்த பல்கலைக் கழக சட்டமாணி பட்டப்படிப்புத் திட்ட நுழைவுப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி யாழ்/ செங்குந்தா இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரை நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் சட்ட மாணிப் பட்டப்படிப்பு திட்ட நுழைவுப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைவரும் பங்கு கொள்ளலாம். இக்கருத்தரங்கு பற்றிய மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 0777246723 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ–4)

# பொலனறுவையில் படகு கவிழ்ந்து 6 பேர் உயிரிழப்பு

பொலனறுவை வெலிகந்த மகாசேனன் குளத்தில் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி– தவுலகல பிரதேசத்தை சேர்ந்தவர்களே இந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர். வெலிகந்தயில் உள்ள தமது உறவினர்களை பார்க்க சென்றிருந்த இவர்கள் நேற்று கண்டி திரும்பும் வழியில் மகாசேனன் குளத்தில் படகில் செல்ல தீர்மானித்துள்ளனர்.

இதற்காக மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர் களின் படகை பெற்று அதில் பயணம் செய்து விட்டு கரை திரும்பும் வழியில் படகு உடைந்து நீரில் மூழ்கியுள்ளது.

இவர்களைக் காப்பாற்ற சென்ற பெண்ணொருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் இரண்டரை வயது குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர். (ஸ்ரீ–2)

# பொதுக்கிணறுகள் சுத்திகரிப்பு


(பூநகரி)

பூநகரிப் பொதுச் சுகாதாரப்பிரிவின் பரிசோதகர் பிரிவில் உள்ள அனைத்துப் பொதுக்கிணறுகளுக்கும் சி.ரி.எவ் நிறுவனத்தால் சுத்திகரிக்கப்பட்டு குளோரின் இடப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தால் புதிதாக கட்டப்பட்ட திருத்த வேலைகள் செய்யப்பட்ட கிணறுகளுக்கும் குளோரின் இடப்பட்டு மக்கள் பாவனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பூநகரி பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இடப்பெயர்வின் போது பாவிக்கப்படாமல் அசுத்தமடைந்த கிணறுகளை மக்கள் பாவிக்க வேண்டாம் என சுகாதார பகுதியினர் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்புளுவன்சா தடுப்பூசி மருந்து எச்1என்1 என்பன பூநகரி சுகாதார பரிசோதகர் பிரிவில் ஏற்றப்பட்டு வருவதாக சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ–3–84)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கோலத்தின் மத்தியில் பூ

மார்கழி மாதத்தில் அதிகாலையில் வாசலில் கோலம் போட்டு அதன் மத்தியில் பூசணிப்பூ அல்லது செம்பருத்திப்பூ வைக்கும் வழக்கம் உள்ளது. பூசணிப் பூவை அனைவரது வீடுகளிலும் வைப்பதில்லை. எந்த வீட்டில் திருமணத்திற்குத் தயாராகக் கன்னிப் பெண்கள் இருக்கின்றனரோ அங்குதான் வைப்பர்.

தங்கள் குடும்பத்தில் உள்ள பையனுக்கு வரன் தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர் பூசணிப் பூவைப் பார்த்து, அவ்வீட்டில் திருமணத்திற்குத் தயாராகப் பெண் இருப்பதைப் புரிந்துகொண்டு தைமாதத்தில் மணம்பேசி முடிப்பர். இதனால்தான் வாசலில் பூ வைக்கும் பழக்கம் உருவானது. இப்போது அழகிற்காக வைக்கிறார்கள்.

# வெள்ளி நற்சிந்தனை 154

## பக்தியின் மொழி தமிழ்

'நீரின்று அமையாது உலகு' என வள்ளுவர் கூறியுள்ளார். உலகில் வாழும் அனைத்து உயர்களும் நீரை உட்கொள்கின்றன. நீர் நிலைகள் உள்ள இடங்களில் மக்கள் தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். ஐம்பூதங்களில் ஒன்றான நீர் வழிபடும் பேராற்றலாகவும் அமைந்தது. வழிபாட்டிடங்களான திருக்கோயில்களின் அருகிலே இயற்கையான நீர்நிலைகள் இருந்தன. தேவாரங்களில் நீர்நிலைகள் பற்றிய குறிப்புகள் அதிகமாக உண்டு.

சம்பந்தரது பாடல்களில் நீர்நிலை பற்றிய காட்சிப் புனைவு பெரும்பான்மையாக உள்ளது. தமது பாடல்களில் இயற்கைப் புனைவை ஓர் அமைப்பாகக் கொண்டிருந்த சம்பந்தர் நீர்நிலை பற்றிய காட்சிகளையும் இணைத்துள்ளார். திருக்கோயிலின் அமைப்பு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புடையது. தமிழர் வழிபாட்டில் நீர் பல்வேறு நிலைகளில் தொடர்புற்றிருந்தமையால் அது பற்றிய குறிப்புகளும் பாடல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

திருக்கோலக்கா என்னும் திருத்தலம் பற்றிப் பாடும் சம்பந்தர் அங்குள்ள நீர்வளத்தை வெகு அழகாகப் பாடியுள்ளார். நீரோடையிலே வாளை மீன்கள் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் பாய்ச்சல் மகிழ்ச்சியான வாழ்க்கையைக் காட்டுகிறது. அருகில் இருக்கும் பொய்கையில் மாதர்கள் நீரைக்குடைந்து நீராடும் காட்சியைக் காண்கிறார். பெண்கள் அக்காலத்தில் பொதுநீர் நிலைகளில் நீராடும் வழக்கமிருந்துளது. இதனை ஆண்டாளும் மணிவாசகரும் முறையே திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களில் பதிவு செய்துளர். திருக்கோயில் அருகிலுள்ள பொய்கையிலே நீராடிய பின் இறைவனையும் வழிபட்டுச் செல்லும் நடைமுறை இருந்துளது.

எனவே திருக்கோலக்காவில் உறையும் சிவனது அழகிய திருக்கோலத்தைச் சம்பந்தர் அடுத்துக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார். நீண்ட சடை, அதில் சூடியிருக்கும் துண்டப்பிறை, உடல் முழுவதும் சாம்பற்பூச்சு, கீழே அரையில் கோவண ஆடை. இந்த உருவம் என் கொலோ? எனச் சம்பந்தர் அதிசயத்துக் கேட்பதாகப் பாடல் அமைந்துள்ளது. 'சாம்பற்பூச்சு' என்ற தொடர் இறைவன் திருவுருவத்தில் நீறு அணிந்திருக்கும் கவினை நன்கு விளக்கி நிற்கிறது. தற்காலத் தமிழ்மொழி நடையிலும் பூசிப் புணர்த்திச் செல்லும் நடைமுறை வழக்கமாக இருப்பது சுட்டப்படுகிறது. சம்பந்தர் கண்களில் கண்ட இறைவன் கோலம் அவரது பார்வையின் தன்மையாகப் பாடலில் வெளிப்பட்டுள்ளதெனலாம். திருமுடியிலிருந்து அவருடைய பார்வை தொடங்கி அரையில் அணிந்திருக்கும் ஆடை வரை சென்றுள்ளது. உள்ளத்திலே கள்ளம் இல்லாத குழந்தைப் பருவத்தினராய சம்பந்தரது பார்வை இறைவன் திருக்கோலம் கண்டு வியப்படைகிறது. அந்த வியப்புணர்வே பாடலாக வெளிவருகிறது.

*"மடையில் வாளை பாய மாதரார்*
*குடையும் பொய்கைக் கோலக்காவுளான்*
*சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்*
*உடையும் கொண்ட வுருவமென் கொலோ!"*

இளவயதினரான சம்பந்தருடைய கேள்வி இன்றும் இளவயதினரிடையே நிலவுகிறது. இறைவன் திருக்கோல அழகைக் கண்டு வழிபடும் மனநிலை பலருக்கில்லை. மனத்தைப் பக்குவப்படுத்தி வழிபட ஒரு பயிற்றுநிலை இன்று தேவையாக உள்ளது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளை ஒடுக்குவதிலிருந்து பாகிஸ்தான் பின்வாங்கக்கூடாது

## அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் இருந்து பாகிஸ்தான் பின்வாங்கக் கூடாது. தொடர்ந்து உறுதியாகப் போராட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தானுக்கு தொடர்ந்து அமெரிக்கா பக்கபலமாக இருந்து உதவியளிக்கும் என்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் குரோவ்லே தெரிவித்தார்.

வோஷிங்டனில் கடந்த 21 ஆம் திகதி செய்தியாளர்களுக்கு வழக்கமாக அளித்த பேட்டியின் போது குரோவ்லே இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை பாகிஸ்தானுக்குள் புகலிடமாகியுள்ள பயங்கரவாதிகள் அந்நாட்டின் தேசப் பாதுகாப்புக்கு மட்டுமல்லாது பிற நாடுகளுக்கும் கடும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதை உணர்ந்து பாகிஸ்தான் பொறுப்புடன் செயற்பட வேண்டும். பயங்கரவாதிகளுக்கு எதிராகப் பாகிஸ்தான் சமீப காலமாக எடுத்து வரும் நடவடிக்கை திருப்தி அளிக்கும் விதத்தில் உள்ளது. பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் பிறநாட்டு இராணுவத்தைவிட பாதிஸ்தான் இராணுவம் அர்ப்பணிப்புடன் போராடுகிறது என்பதை அமெரிக்கா நன்கு அறியும்.

எனினும் பயங்கரவாதிகளை ஒடுக்கும் விடயத்தில் பாகிஸ்தான் மேலும் துரிதமாகச் செயற்பட வேண்டும். முடிந்தவரை உறுதியுடன் செயற்பாடு இருக்க வேண்டும். இதற்கு தெடர்ந்து ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவுள்ளது.

பயங்கரவாதிகளை ஒடுக்கும் விடயத்தில் பாகிஸ்தானின் செயற்பாட்டில் அமெரிக்காவுக்கு திருப்தி இல்லை. கடும் அதிருப்தியில் ஆழ்ந்துள்ளது என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தச் செய்தி ஆதாரமற்றது என குரோவ்லே கூறினார்.

தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினை குறித்து கருத்துக் கூறிய குரோவ்லே காஷ்மீர் பிரச்சினை என்பது இந்தியா , பரகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் விவகாரம். இதனால் அந்தப் பிரச்சினையை இரு நாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்றார்.

காஷ்மீர் விவகாரத்தை சுமுகமாகத் தீர்க்க இரு நாடுகளும் முயற்சிக்க வேண்டும். இதற்காக இரு நாடுகளும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பேச்சுவார்த்தையை தொய்வில்லாமல் நடத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஸ்ரீ-2)

## ஜூன் மாதம் 23 ஆம் திகதி சர்வதேச விதவை தினமாக ஐ.நா.பிரகடனம்

சர்வதேச விதவை தினமாக ஜூன் 23 ஆம் திகதியை ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா.பொது சபையில் கடந்த 21 ஆம் திகதி ஒருமனதாக தீர்மானமும் நிறைவேறியது.

உலகம் முழுவதும் கணவன்மார்களை இழந்து ஆதரவின்றி தவிக்கும் பெண்களின் நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்திலும் அவர்களின் துயரை துடைக்கும் வகையிலும் சர்வதேச தினத்தை அறிவிக்க வேண்டும் என்று கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

சர்வதேச விதவை தினத்தை அறிவிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி உலகத் தலைவர்களும் ஐ.நா.சபையில் பல தடவை உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இதை பரிசீலித்த ஐ.நா சபை இப்போது ஜூன் 23 ஆம் திகதியை சர்வதேச விதவை தினமாக அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



இத்தாலி உரோமில் மாணவர்கள் அரசு கல்வியில் சில சீர்திருத்த மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்




# ஆஜென்டீனாவின் முன்னாள் இராணுவ ஆட்சியாளருக்கு ஆயுள் தண்டனை



ஆஜென்டீனாவின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஜோர்ஜ் வெடலாவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

85 வயதான ஜெனரல் ஜோர்ஜ் வெடாலாவிற்கு மத்திய ஆர்ஜென்டீன நகர நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

1976 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாற்றுக் கொள்கையாளர்களை ஜோர்ஜ் படுகொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஜென்டீனாவில் இடம்பெற்ற அழுக்கு யுத்தம் என வர்ணிக்கப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு வெடலாவே பொறுப்புதாரி எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. வெடலாவின் ஆட்சிக் காலத்தில் 30 ஆயிரம் பேர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சிவிலியன் சிறையில் வெடலா ஆயுள் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இராணுவ ஆட்சிக் காலத்தில் மேற்கொண்ட உரிமை மீறல்களுக்காக ஏற்கனவே வெடலாவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கார்பொடாவில் 31 கைதிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு வெடலா பொறுப்பு சொல்ல வேண்டுமென நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



உக்ரைன் நாட்டின் தலைநகர் கிய்வ்வில் உள்ள சுவீடன் தூதரகம் முன்பு விக்கிலீக்ஸ் நிறுவுனர் அசேஞ்சின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்

# ஐவரி கோஸ்டில் சிவில் யுத்தம் ஏற்படக்கூடிய அபாயம்

## ஐ.நா. எச்சரிக்கை

ஐவரி கோஸ்டில் மீண்டும் சிவில் யுத்தம் ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளினால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளினால் சிவில் யுத்தம் வெடிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அறிவித்துள்ளார்.

அந்நாட்டின் ஜனாதிபதி லாயுராண்ட் காபக்பூ சட்ட விரோதமான முறையில் ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் படையினரை வெளியேற்ற முயற்சித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அலசனே ஒயு ஆட்ரா வெற்றியீட்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

எனினும் ஜனாதிபதி காபாக்பூ தேர்தலில் மோசடி இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சி மேற்கொண்டு வருகின்றார்.

அமைதிகாக்கும் படையினர் நாட்டை விட்டு வெளியேறாவிட்டால் அவர்கள் கிளர்ச்சியாளர்களாக் கருதி நடவடிக்கை எடுக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் சர்வதேச குழுவொன்று விசாரணை நடத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இரவு நேர ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சீன ஊடகங்களில் ஆங்கில மொழிப் பயன்பாட்டுக்குத் தடை

ஊடகங்களில் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதற்கு சீனா தடை விதித்துள்ளது.

பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களில் பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தக் கூடாது எனவும் குறிப்பாக ஆங்கில மொழிச் சொற்கள் பயன்படுத்தப்படக் கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதனால் சீன மொழியின் தனித் தன்மைக்கு குந்தகம் ஏற்படுவதாக அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளதோடு வெளிநாட்டு சொற்களைப் பயன்படுத்துவதனை சீன ஊடகங்கள் தவிர்க்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும் எனவும் சீனாவின் சகல ஊடகங்களிலும் அதிகபட்சமாக வெளிநாட்டு சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக சீன ஊடக நிர்வாக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான மொழிக் கலப்பு சீனக் கலாசாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனால் பிறமொழிச் சொல் பிரயோகிக்கப்பட்டால் அதற்கான சீனமொழி விளக்கம் கட்டாயமாக சேர்க்கப்பட வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி. கனவு அணியில் ஜெயசூர்யா, முரளிதரன்



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் தேர்வு செய்யப்பட உள்ள கனவு அணியில் இலங்கை வீரர்கள் ஜெயசூர்யா, சங்ககார, முரளிதரன் இடம்பெற்றுள்ளனர்.

ஒருநாள் போட்டிகள் ஆரம்பமாகி 40 ஆண்டுகள் (வரும் ஜன.5) நிறைவைக் கொண்டாடும் வகையில் ஐ.சி.சி சார்பில் 'ஓல்ட் ரைம்கிரேட்ஸ்ட்' ஒருநாள் கனவு அணி தேர்வு செய்யப்படுகிறது.

இது குறித்து ஐ.சி.சி. வெளியிட்ட அறிக்கையில் ,

"உலகளவில் சிறந்த கனவு ஒருநாள் அணியை தேர்வு செய்யும் முடிவை கிரிக்கெட் ரசிகர்கள் கையில் கொடுத்துள்ளோம். இதற்காக 48 வீரர்கள் அடங்கிய பட்டியலை தேர்வு செய்துள்ளோம். இதில் சிறந்த அணியை உலகம் முழுவதிலும் உள்ள ரசிகர்கள் இலணயத்தளம் மூலம் தேர்வு செய்யலாம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வாக்குப் பதிவு எதிர் வரும் ஜனவரி 2 ஆம் திகதி வரை நடக்கும். இறுதி முடிபு வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி அறிவிக்கப் படும். இந்த அணியில் விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரராக இந்திய அணி சார்பில் தோனி மட்டும் இடம்பெற்றுள்ளார். சகல துறை வீரர் பிரிவில் ஓய்வு பெற்ற கபில் தேவ், ஆரம்ப வீரராக கங்குலி, சுழற்பந்து வீச்சில் கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர் உள்ளனர்.

ஆனால் நடுத்தர வரிசை, வேகப் பந்து வீச்சாளர்கள் பிரிவில் இந்திய வீரர்கள் யாரும் இடம்பெற வில்லை.

கனவு அணியில் இடம்பெறவிருக்கும் முக்கிய நட்சத்திரங்கள்:

ஆரம்ப வீரர்கள்: இந்தியாவின் சச்சின், சேவாக், கங்குலி, ஜெயசூர்யா (இலங்கை), ஹைடன் (ஆஸி.), சயீத் அன்வர் (பாக்.) உள்ளிட்ட 8 பேர்.


நடுத்தர வரிசை: பொன்டிங் (ஆஸி.), மேற்கிந்தியத் தீவு வீரர்களான பிரையன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் உள்ளிட்ட 8 பேர்.

சகல துறை வீரர்கள்: இந்தியாவின் கபில் தேவ், தென்னாபிரிக்காவின் கலிஸ், பொலக், இம்ரான் கான் (பாக்.) உள்ளிட்ட 8 பேர்.

வேகப் பந்து வீச்சாளர்: வசிம் அக்ராம் (பாக்.), மக்ராத் (ஆஸி.), அலன் டொனால்ட் (தென்.ஆபி), உள்ளிட்ட 8 பேர்.

சுழற்பந்து வீச்சாளர்: இந்தியாவின் கும்பிளே, ஹர்பஜன் சிங், முரளிதரன் (இலங்கை), வோர்ன் (ஆஸி.), விக்டோரி(நியூசி) உள்ளிட்ட 8 பேர்.

சிறந்த போட்டி: இது தவிர இது வரை நடந்த ஒருநாள் போட்டிகளில் முதல் 10 போட்டிகளும் தேர்வு



செய்யப்பட்டுள்ளது. இதில் கடந்த 1983 ஆம் ஆண்டு நடந்த இந்திய-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண இறுதிப் போட்டி, கடந்த 2004 கராச்சியில் நடந்த இந்தியா- பாகிஸ்தான் இடையிலான ஒருநாள் போட்டியும் இடம் பெற்றுள்ளது.

# ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நாளை பி.ப 2.30 மணிக்கு ஸ்ரீ அம்மா பகவானின் பாத பூஜையும் முத்தித் தீட்சை நிகழ்வும் இடம்பெறவிருப்பதால் பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

(ச-7)

# வடபகுதி புகையிரதப் பாதை புனரமைப்பில் இந்தியர்கள்

இந்தியப் புகையிரதக் கட்டுமான நிறுவனத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படவுள்ள வட பகுதிக்கான புகையிரதப் பாதை புனரமைப்புப் பணிகளில் 200 இந்தியப் பொறியியலாளர்கள் ஈடுபடவுள்ளனர்.

வடக்கில் சுமார் 200 கிலோ மீற்றர் நீளமான மூன்று தொடருந்துப் பாதைகளின் புனரமைப்புப் பணிகளை இந்திய தொடருந்து கட்டுமான நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.


இப்புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்தியாவில் இருந்து 200 பொறியியலாளர்களும் 100 தொழில்நுட்பவியலாளர்களும் இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு விஜயம் செய்து தமது பணிகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்புனரமைப்புப் பணிகளில் இலங்கையைச் சேர்ந்த 100 பொறியியலாளர்களும் ஈடுபடவுள்ளதாக இந்திய தொடருந்து கட்டுமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ச-5)

# அமைச்சர் டக்ளஸைக் கைது செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு புதிதானதல்ல

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அறிக்கை



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கைது செய்யுமாறு கோரிச் சென்னை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி புகழேந்தி தற்பொழுது தாக்கல் செய்துள்ள மனுவானது புதிதானதல்ல என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி விடுத்த அறிக்கையொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சென்னை உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணி புகழேந்தி தற்பொழுது தாக்கல் செய்துள்ள மனுவானது இதற்கு முன்னர் சென்னை மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட றிட் மனுவைத் தள்ளுபடி செய்து ஏற்கனவே மேல்நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்பை மீளாய்வு செய்யுமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஒரு விண்ணப்பமேயன்றிப் புதியதொரு வழக்கல்ல.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எந்தவொரு மனுவையும் விசாரணைக்காக ஏற்றுக் கொண்டு பூரண விசாரணையின் பின்னர் அம்மனு மீதான தீர்ப்பை வழங்குவது நீதிமன்ற நடவடிக்கைகளில் சர்வசாதாரணமான ஒரு செயற்பாடாகும்.

கடந்த செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதுடெல்லிக்கு விஜயம் செய்த வேளையில் சட்டத்தரணி புகழேந்தி ஏற்கனவே சென்னை மேல்நீதிமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவைக் கைது செய்ய வேண்டுமென றிட் ஆணை பிறப்பிக்குமாறு கோரிச் செய்திருந்த றிட் மனுவிற்கு அரச தரப்பில் ஆட்சேபனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இம்மனுவை விசாரித்த மேல்நீதிமன்றம் அதனைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியிருந்தது.

தற்போது சட்டத்தரணி புகழேந்தியினால் மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மீளாய்வு மனு ஒன்றையே அவர் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளதுடன் இம்மனு மீதான ஆட்சேபனையைத் தெரிவிக்கும் கடமை இந்திய அரசைச் சார்ந்ததாகும் என்பதுடன் இம்மனுவிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு கட்சிக்காரர் அல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு எதிராகச் சென்னை உயர்நீதிமன்றம் ஒன்றில் தொடுக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி புகழேந்தி தனது றிட் மனுவில் குறிப்பிட்டிருந்த வழக்கு சம்பந்தமாக சென்னை மேல்நீதிமன்றத்தில் அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அண்மையில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேடப்படும் ஒரு சந்தேக நபர் என்பது ஒரு பிழையான விடயமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு அவரைத் தேடப்படும் சந்தேக நபராக நீதிமன்றம் விளம்பல் கட்டளை ஆக்குவதற்கான சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பாகத் திருப்திப்படக் கூடிய சான்றுகள் இருக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா முன் ஜாமீன் மனுவொன்றைச் சமர்ப்பித்துப் பிணை கோரி விண்ணப்பித்து அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கில் தொடர்ந்து ஆஜராகக் கூடிய சூழ்நிலையை உறுதிப்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் என்றுள்ளது.

(ச)

# வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின் போது என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது

## இயக்குநர் சீமான் பேட்டி

வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின் போது என்ன நடந்தது என யாருக்கும் தெரியாது என இயக்குநரும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான சீமான் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போது விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பற்றிய கேள்விக்கு ஆவேசமாகப் பதிலளித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதில் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கே: தமிழீழத்துக்காக, தமிழர்களுக்காக எவ்வளவு காலத்திற்கு நீங்கள் போராடுவீர்கள்?

ப: ஒரு மூன்று மணி நேர சினிமாவில் ஆரம்பக் காட்சியில் தந்தையைக் கொன்ற வில்லனைக் கடைசியில் கொல்லும் போது கைதட்டுகிறீர்கள். ஒரு இனத்தையே அழித்ததை எப்படி மறந்து விட முடியும். ஈழமக்களுக்காக எந்நாளும் போராடுவோம்.

கே: தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்து விட்டதாக செய்திகள் வெளிவந்தன. அச்செய்தி உண்மையானதா?

ப: பிரபாகரன் மரணமடைந்து விட்டார் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும். பிரபாகரன் இறந்து விட்டார் என்று அதற்கு 20 கதை சொல்லுகிறார்கள். அதை எல்லாம் நம்பாதீர்கள். ஈழ விடுதலைக்காக இவ்வளவு தூரம் போராடியவர் அவ்வளவு சீக்கிரம் அந்தப் போராட்டத்தை விட்டுப் போக மாட்டார் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையில் தான் நாங்கள் வேகமாக இயங்குகிறோம்.

கே: இறுதி யுத்தத்தின் போது என்ன நடந்தது? அங்கிருந்த புலிகள் தப்பியுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன, அது பற்றி...!

ப: என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அதனால் எல்லோரும் அமைதியாகத்தான் இருக்க வேண்டும். கூட நின்றவர்களுக்குக் கூடத் தெரியாது. அப்படியிருக்க யாரும் அது பற்றிச் சொல்வது சரியல்ல. என்னாலும் சொல்ல முடியாது.

கே: பிரபாகரன் இருக்கின்றார் என நீங்கள் நம்புகின்றீர்களா?

ப: என் அண்ணன் இருப்பதாக ஏன் நினைக்கிறேன் என்றால், எனக்கு என் அண்ணன் இறந்து விட்டார் என்று நம்பகமான இடத்திலிருந்து தகவல் வரவில்லை. அதனால் நம்புகின்றேன். அவர் இன்னமும் உயிருடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்.

கே: தமிழ் மக்களுக்கு இத்தொலைக் காட்சிப் பேட்டியூடாக ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

ப: இப்போது எது சொன்னாலும் அது வரலாற்றுப் பிழையாகி விடும். அதனால் பொறுத்திருங்கள். யார் சொல்வதையும் நம்பாதீர்கள். காலம் பதில் சொல்லும்.

(ச-5)

# சிற்றூர்திகள் சேவை தற்காலிக இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தேசிய அனர்த்த பாதுகாப்பு தினம் யாழ்.நகரில் நடத்தப்படவுள்ளதால் யாழ்.முற்றவெளி பகுதியில் தரித்துநின்று சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகள் மற்றும் யாழ்ப்பாணம்- கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்துகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ்.நகரப்பகுதியில் வீதி ஒழுங்கினைக் குலைக்காதவகையிலும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தா வகையிலும் நகரப்பகுதியில் தரித்துநின்று சேவையில் ஈடுபடுமாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி தினங்களில் முற்றவெளி பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து சிற்றூர்திகள் உள்ளூர் சேவையில் ஈடுபடுவதும், பேருந்துகள் கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடுவதும் முற்றாகத் தடைசெய்யப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. இத்தினங்களில் சகல சிற்றூர்தி, பேருந்துகளின் சாரதிகள் யாழ்.பஸ் நிலையத்திலிருந்தே மேற்படி சேவைகள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-5)

# வெளிவிவகார அமைச்...

இக்கூற்று உண்மைக்குப் புறம்பானது என நேபாள அரசாங்கத்தின் தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் சில தவறான புரிந்துணர்வு காணப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சரின் இந்த உண்மைக்குப் புறம்பான கூற்றுக்காக மன்னிப்புக் கோருவதாகவும் நேபாளத் துக்கு அண்மையில் விஜயம் செய்த வெளிவிவகார பிரதி அமைச்சர் நோமல் பெரேரா நேபாளப் பிரதமரிடம் தெரிவித்ததாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மன்னிப்புக் கோரிய விடயத்தை வெளிப்படுத்த வேண்டாம் என்றும் அவர் நேபாளப் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்திலுள்ள வீதிகளின்...

அமையவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்டத்திலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். அதில் அமைச்சர் மேலும் கூறியதாவது,

மாவட்டத்தின் பல வீதிகள் முன்னர் செப்பனிடப்பட்டு திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றில் பல சேதமடைந்து காணப்படுகின்றன. எனவே திருத்தப் பணிகள் திருப்தியடையக் கூடிய விதத்தில் அமையவில்லை.

எனவே இவ்வாறான பணிகளில் துறைசார்ந்த அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தும் அதேவேளை பிரதேச செயலர்களும் பிரதேச சபை செயலாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

இனிவரும் காலங்களில் செப்பனிடப்படும் வீதிகள் சரியாகவும் முறையாகவும் விரைவாகவும் செய்யப்பட வேண்டும்.

யுத்தத்தால் அழிந்து போன எமது பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் இப்பாரிய பணிக்கு நேர காலம் பாராது ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களை உணர்ந்து கடமையாற்ற முன்வர வேண்டும். அப்போது தான் எமது பகுதி விரைவில் அபிவிருத்தியடைய முடியும்.

அத்துடன் நெல்லியடி முதல் மாலுசந்தி வரையான வீதியை உடனடியாகச் செப்பனிடும் விதத்தில் இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பினரின் அனுமதியுடன் அவ்வீதியூடான போக்குவரத்துக்களையும் இடைநிறுத்தி திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

அதேவேளை போக்குவரத் துக்கு ஏற்ற வேறொரு பாதையை பாவிக்க கூடிய விதத்தில் இன்றிலிருந்தே பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அரச செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் மாவட்டத்தின் சேதமடைந்துள்ள பல்வேறு வீதிகளின் திருத்தங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் உள்ளிட்டவற்றின் வீதிகள் குறித்தும் மற்றும் மாநகர சபை, பிரதேச சபை ஆகியவற்றுக்கும் உட்பட்ட வீதிகளைத் திருத்தம் செய்வது தொடர்பாகவும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளும் போதுள்ள இடர்பாடுகள் குறித்தும் முக்கிய சில வீதிகளின் திருத்தப் பணிகளின்போது இரவு பகலாக மேற்கொள்ளக் கூடியதான வகையில் ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், பிரதேச சபை செயலாளர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் பிரதம பொறியியலாளர்கள், இலங்கை மின்சார சபை, யாழ். மாநகர சபை வர்த்தக சங்கம், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ச-5)

# அரசின் நடவடிக்கை...

நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதையும் அமெரிக்கத் தூதுவர் பாராட்டினார்.

கொழும்பில் இலங்கை இராணுவத்திற்கு ஐந்து அம்புலன்ஸ் வாகனங்களை வழங்கிய பின் விடுத்த செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் பெருமளவு பகுதிகள் தற்போது கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எனினும் இன்னும் பெருமளவு வேலை எஞ்சியுள்ளது.

இந் நடவடிக்கைகளை மேலும் விரைவாக பூர்த்தி செய்வதற்காக நாம் தொடர்ந்தும் எமது ஆதரவை வழங்குவோம்.

மீள்குடியேற்றத்துக்கு கண்ணிவெடிகளை அகற்றுவது அத்தியாவசியமாகவுள்ளது. கண்ணிவெடிகள் இருந்தால் மக்கள் தமது வீடுகளுக்குச் செல்லமுடியாது.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது. மக்கள் கிணறுகளில் வெடிப்பொருட்கள் இருப்பது குறித்து அஞ்ச வேண்டி இருக்கும்.

கண்ணிவெடிகளை சிறார்கள் விளையாட்டுப் பொருட்கள் என நினைத்துவிடலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நா. நிபுணர்கள்...

இலங்கை விஜயம் தொடர்பாக உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு அரசாங்கம் அனுமதித்து அதற்கான வசதிகளை செய்துகொடுக்குமாயின் அக் குழுவின் வாக்குமூலங்களை தமது சாதாரண நடைமுறைக்கு அமைய பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் வருகைக்கு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் சில எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தேசிய...

கூறியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனர்த்த முகாமைத்துவ அலகுகளை பலப்படுத்தவும் இந்த நிதியம் பயன்படும்.

அனர்த்தங்களினால் வரக்கூடிய அழிவுகளையும் துன்பத்தையும் குறைப்பதற்கு உதவக்கூடிய கருவிகளான பாக்கோ, தீயணைப்பு ட்ரக், அம்புலன்ஸ் போன்றவற்றை ஒவ்வொரு மாவட்ட அலகுக்கும் வழங்க எண்ணுகின்றோம் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார். பல வெளிநாட்டு நிறுவனங்களும் உதவி வழங்கும் முகவரகங்களும் இந்த நிதியத்துக்கு தொடர்ந்து உதவி வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

அனர்த்தத்தினால் வரக்கூடிய சொத்து அழிவுகளையும், உயிர் இழப்புக்களையும் குறைக்க இந்த நிதியம் உதவும் என அவர்களை கருதுகின்றனர் என அமைச்சர் கூறினார். (ச-5)

# தமிழினிக்கு...

ழினி தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணி அரசியல் பொறுப்பாளராக செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

உறுப்பினர்களை சேர்த்தமை மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ரஸ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு மே மாத இறுதியில் தமிழினி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழினி தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என இரகசிய பொலிஸார் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். (ச-5)

# ஐக்கிய...

அதேவேளை தற்போதைய செயற்குழு அங்கத்தவர்கள் இடைக்கால குழுவுக்கு நியமிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொருளாளர் சென்ரத் கப்புகொட்டுவ, தவிசாளர் காமினி ஜகவிக்கிரம பெரேரா, பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னர் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார். (ச-5)

# முஸ்லிம் காங்கிரஸை...

கத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக் கொள்வது குறித்து ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கம் கூறியுள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் இணைத்துக்கொண்ட பின்னர் மூன்றாவது கட்டத்தில் முஸ்லிம் கட்சிகளையும் இணைத்துக்கொள்வது எனத் தீர்மானித்திருந்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்தால் அது குறித்து ஆராய்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்புக்கு சில அரசியல்வாதிகள் எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச-5)

# அடுத்துவரும் இரண்டு வருட...

அமைச்சரவை பொறுப்புக்களின் அதிகாரங்கள் பறித்தெடுக்கப்பட்டமை, முக்கிய அமைச்சர்களை சிரேஷ்ட அமைச்சர்களாக்கி ஓரங்கட்டியமை, கட்சிக்குள் வலுத்துவரும் தலைமைத்துவ சர்வாதிகாரம் மற்றும் அரசாங்கத்தினுள் ஜனாதிபதியின் எதேச்சாதிகார போக்கு என்பனவே அரசாங்கம் கவிழ்வதற்கான காரணங்களாக அமையலாம் என்று அமைச்சரொருவர் கூறியதாக ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

2001ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் பலர் கட்சி தாவி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சங்கமமானது போல் இல்லாவிட்டாலும் எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தில் அதிருப்தியாளர்கள் கட்சி மாறுவதை தடுத்து நிறுத்த முடியாது போகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தின் எதேச்சாதிகார போக்கு மற்றும் மோசடிகள் காரணமாக நாட்டில் விலைவாசி உயர்ந்துள்ள நிலையில் பொதுமக்களும் சம்பள உயர்வின்மை காரணமாக அரசாங்க ஊழியர்களும் அரசாங்கத்துடன் முரண்படும்காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இவ்வாறான நெருக்கடிகள் காரணமாக எதிர்வரும் இரண்டொரு வருடங்களுக்குள் அரசாங்கத்திற்குள் கருத்து மோதல் வலுத்து கவிழ்ந்துவிடும் என்றவாறு அவர் எதிர்வு கூறுகின்றார்.

அது மாத்திரமின்றி ரணில்-சஜித் கருத்தொற்றுமை காரணமாக தற்போது இளம் தலைமுறையின் வாக்காளர்கள் மாத்திரமின்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாய்வதற்கு தயாராக இருப்பதையே நாட்டின் அண்மைய நிகழ்வுகள் படம்பிடித்துக் காட்டுகின்றன என தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# தேசிய பாதுகாப்புத்...

நிகழ்வுகள் வடக்கில் இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும். யுத்தத்தின் போது உயிரிழந்த படையினரும் நினைவு கூரப்படுவர் என மேற்படி நிலையம் தெரிவித்துள்ளது.

சுனாமியால் உயிரிழந்தோருக்காக 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.25 முதல் 9.27 மணி வரை 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமர வீர நாட்டு மக்களை கோரியுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில்களுக்கான உபகரணங்களும் பாடசாலை சிறார்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப் படும் எனவும் அவர் கூறினார். (ச-5)


உடன் தேவை

அலுவலகச் செய்தியாளர் (இருபாலாரும்)

பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள் ,பகல் இரவுக் கடமை)

பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள் ,இரவுக் கடமை)

சிற்றூழியர்கள் (இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் வரவும். அலுவலகத்திற்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வலம்புரி

இல.3, 2-ம் ஒழுங்கை , பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

MyWay English ஆங்கில பயிற்சி

ஆரம்பம் : 26.12.2010 சனி, ஞாயிறு 3 மாதம்

ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு

இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்

MyWay 077 33 63 456

182, Stanley Rd, Jaffna

கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி திக்கம்

(2011) A/L DAY CLASS

வர்த்தகம் ,கலை ,

கணிதம்,விஞ்ஞானப் பிரிவுகள்

ஆரம்பம்:27.12.2010

மு.ப.9.00 மணி

(3288)

யாழ்.நகர் ஆசிரியர் குழு

கண்ணீர் அஞ்சலி

எமது ஆலய பரிபாலன சபையின் உப தலைவர்

நா.அகிலன் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி நாகலிங்கம் மகேஸ்வரி

அவர்களின் திடீர் மறைவு குறித்து மிகுந்த கவலையடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

கண்ணகி அம்மன் ஆலயம் ளாய், வட்டுக்கோட்டை.

பரிபாலன சபையினரும் தொண்டர் களும்

(C-1900)

நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை

31.12.2010வரை

சொனி ,பனசொனிக் 14",21",25" கலர் ரிவி,டிஸ் ரிவி, ரிசீவர், DVD பிளேயர்,அம்பிளிபயர்,பவல்ஸ்,வூபர்ஸ்,கசற்றெக்கோடர்,றேடியோ, சுவர் ,மேசை ,கை மணிக்கூடுகள் ,றைஸ் குக்கர் ,காஸ் குக்கர் ,பிறசர் குக்கர், மண்ணெண்ணெய் குக்கர் ,கிரைண்டர் ,அயன்,கொட்பிளேட் ,எலெக்ரிக் கேத்தல்,சார்ச்லைற்,சார்ச்சுரோச் ,சப்பிளைசர்கள் மற்றும் எலக்ரிக்கல்,எலக்ரோனிக் பொருட்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

(C-1881)

நியூ சிற்றி றேடேர்ஸ்

319 A, K.K.S. றோட் .யாழ்ப்பாணம்.

T.P.:- 0212223226


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org